[illegible]

V 4 NO. 20 21 May 1931

JL
[illegible]211, N28KN
N13:4'20
188918

646

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931ஆ மே மீ 21உ [No. 20.

30 JUN

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 381
2. அப்பர் (64-கலை-யோகம்) E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 383
3. சூளாமணி - (இரதநூபுரச் சருக்கம் - 76—83) K. இராமரத்நம் ஐயர் B.A. 386
4. பிஸாரோ நாடகம் - (அங்கம்-5, களம் 3 & 4.) R. B. Sheridan 388
5. யாப்பிலக்கணம் (தொடை - எதுகை, மோனை) 389
6. மகாமகோபாத்தியாய உ. வெ. சாமிநாத ஐயர் T. S. கோதண்டராம ஐயர் 393
7. கம்ப ராமாயணம் (நகர் நீங்கு படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L. 395
8. வர்த்தமானம் 399

## கலாநிலயம்

### மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ.

188918

I

**காம**வெகுளி மயக்கம் என்னும் மும்மலங்கள் அற்றவர்தாமே வீடுபெற்றவர் என்பதற் குரியவராதல் பண்டைநாள் கண்ட வுண்மை. இம்மூன்றில், இன்னதென்று தன்னை எளிதில் தோற்றிக்கொள்ளாமையாலும் மற்றைய இரண்டிற்கும் காரணமாயிருத்தலாலும் இறுதியில் நின்ற மயக்கமே மிகவும் பொல்லாதது. அதன் இலக்கணத்தை வெவ்வேறு வகைகளில் விரித்துரைப்பாராயினும் மெய்ம்மையைப் பொய்யென்றும், பொய்யை மெய்யென்றும் மாறி மயங்கி விவகரிக்கின்ற மாறுட மடமையை உட்கொண்டு திரிவது அதன்தொழில். இந்தத்தொழில், பொய்யை மெய்யெனக் கொள்வதென்றும், மெய்யைப் பொய்யெனக் கொள்வதென்றும் இருதிறத்தினில் எதுருற நடக்கும் என்பதைச் சிறிது முன்னரே குறித்திருக்கின்றோம்.

நாம் இங்கு இதன் தத்துவங்களை சமயகொள்கைகளின்படி ஆராய நினைக்கவில்லை. மற்று, இன்று நம்மிடைப் பயில்கின்ற இயக்கங்களின் அடிப்படையான நேர்மையை நிறுத்துத் தரம்பார்ப்பதற்கியன்ற இரண்டொரு விடயங்களை மாத்திரங் கருதுவோம். மெய்யாய ஒன்றைப் பொய்யென முதலில் மயங்கிவிட்டால் அம்மயக்கத்திற்குரிய குறை அதனோடு நின்றுவிடும். மற்றவைகளையும் அது சார்ந்திடாதெனப் பொதுவகையிற் கூறலாம். இரவிலொரு தெருவோரத்தில் படுத்திருந்த நாயினைக் கல் கிடக்கின்றதென மயங்குவானாயின், அதனால் இவனுக்கேனும் அந்நாய்க்கேனும் யாதும் தீது நேராமல் தீரினுந் தீரலாம். பிறகு அது நாயென்று தெரிந்தபின், வேறு ஒரு கல்கிடந்தாலும் அதுவோர் 'நாயோ' என விலகிச் செல்லும் மதியே அவனுக்கு வாய்க்கும். மெய்யாய நாயை அவன் முதலில் கல்லென்று பொய்யாகக் கருதியதன் பயன் பெரும்பான்மை இன்னதே. இவ்வாறன்றி முதலில், கல்லொன்றைக் கண்டு நாயென மயங்கினவன் அவன் என்று வைத்துக்கொள்வோம். பிறகு அப்பிழை தெரிந்தபின் நிசமானவோர் நாயைக் கல்லெனக் கருதப் புகுவது அவனுக்கு இயற்கையாகும். அப்படிக் கருதியவன் கையுங்காலுஞ் சும்மா இரா. கல்தானே அதுவென்ற நிச்சயத்தாலும் இம்முறை முன்போல் தான் மோசம் போகவில்லை என்பதை வற்புறுத்துவதற்கும், நூற்றிற்குத் தொண்ணூற்றொன்பது, கைத்தடிகொண்டு அடித்தேனும் கால்கொண்டு உதைத்தேனும், நாய்க்குந் துன்பஞ் செய்து தானுங் கடிபடுவான். இது மாந்தரியல். பொய்யாய கல்லை முதலில் மெய்யாய நாயென்று மயங்கியதால் விளைந்த பொல்லாங்கு இது. இன்னணம், சிறிதும் பெரிதுமான பல்வேறு விடயங்களில் இந்தச் செய்தியின் நுண்மையைச் சற்றே ஆராய்ந்து உணர்ந்துகொள்ளலாம். முதலில் மெய்யைப் பொய்யென்று மயங்கினும் மயங்குக, பொய்யை மாத்திரம் மெய்யென மயங்கப் பயிலவேண்டாம். பின்னதில் விபரீதம் பெரிதுளது. இவ்வுண்மையைத் தன்னுட்கொண்ட சம்பவம் ஒன்று—நகை மிக விளக்குந்

BL

தாத்தது—எம் கண்முன் நிகழ்ந்ததை, இங்கு உரைப்பது இக் கருத்தை விளக்குதற் குதவும் என நினைக்கின்றோம்.

நாலைந்து ஆண்டுகளுக்குமுன் எம் உறவினர் சிலர் எம் மனையின்கண் விருந்தினராகி வந்திருந்தனர். இவர் சென்னையிலுள்ள சித்திரகலாசாலையை (School of Arts) காண விழைபவே, அவர்களை அங்கு அழைத்துச் சென்றோம். எம்மொடு வந்திருந்தவர்களில், முப்பத்தைந்து நாற்பது வயதுடைய மாது ஒருத்தி-உயர்தர உத்தியோகத்திலிருப்பவர் ஒருவருடைய மனைவி—அவளுடைய பிள்ளை யொருவன் அவ்வருடம் பி. எ. பரிட்சைக்குச் சென்றிருந்தான். நாங்கள் சென்று சித்திரகலாசாலையின் வாயிலில் இறங்கினோம். அதன் வாயிலில், அச்சாலையின் வாயில்காப்போன் (Gate-peon) உருவம் ஒன்று மண்சிலைசெய்து வைக்கப் பெற்றிருந்தது. இச்சிலை செய்தவன் திறமையால், அது சிலையென்றும் உயிருடைய ஆளென்றும் எளிதில் தெரிந்துகொள்வது அருமை. மேலும், அச் சித்திரகலாசாலையின் வாயிற்சேவகனையே நேரே வைத்துக்கொண்டு அவனையேபோல் அமைத்த சிலை அது. உடை நிறம் உடல்வாட்டம் அவ்வளவும் அப்படியே. நாம் முன்னே குறித்த அந்த மாது, இச்சிலையைப் பார்த்து வாயிற்சேவகனே உட்கார்ந்திருப்பதாக மயங்கி, "ஏனப்பா, நாங்கள் உள்ளே போகலாமோ" எனக்கேட்டனள். அவ்விதமே மயங்கியவர் எம்மோடு வந்தவர்களில் இன்னும் இரண்டொருவர். இறுதியில் தம் பிழையறிந்து அவள்நாண யாவரும் நகையெய்தினோம்! பின்னர்ச் சில நாட்களுக்கப்பால் சென்னையின் வேறோரிடத்தில் பெரியதோர் பொருட்காட்சி (exhibition) நிகழலாயிற்று. அதற்கும் அவ்விருந்தினர்களோடு சென்றோம். அங்குச் 'சித்திரகலாசாலையாரும்" தமக்கென வொரு தனிப் படமாடம் அமைத்து அதனுள் தம் சித்திரப்பொருள்களைக் காட்சிக்கு வைத்திருந்தனர். அதனருகு அண்மினோம். இதற்குள் செல்வதோ இல்லையோ, என்னும் வாதம் ஏற்பட்டது. சிலநாட்களுக்கு முன்தான் கலாசாலையிலேயே பார்த்தாகிவிட்டபடியால் மீண்டு மிங்குப் 'போவானேன்' என்றார் சிலர்; 'போவோமே' என்றார் பிறர். இதற்கிடையில், பொருட்காட்சி பார்ப்பதற்குப் போந்திருந்த எமக்கு நட்பாய வேறோர் குடும்பத்தினர், எங்களைக் கண்டதும் உறவாடி எம்முடன் வந்து சேர்ந்துகொண்டு, அச் சித்திரகலாசாலைக் காட்சிப்பொருள் வைத்திருந்த இடத்திற்குள் தம்மோடுவருமாறு தூண்டினர். நாங்களும் உடன்பட்டு அதன் வாயிலண்டை நகர்ந்தவுடன், 'என்னை அங்கு ஏமாற்றியது போதாதென்று இங்கும் வந்து உட்கார்ந்து கொண்டிருக்கின்றது பார் இது" என்று இயம்பிக்கொண்டே, உருவச்சிலை என மதித்த வாயிற்சேவகன் இருபுற விலாக்களிலும் தன்னிரு கைவிரல்களையும் விட்டளைந்து கின்டினாள், முன்னைநாள் சிலையை ஆளென்று மயங்கிய அம்மாது. "என்னம்மா இது; உங்களுக்கென்ன பைத்தியம் கிறுக்குப்பிடித்திருக்கின்றதா. என்னைப் போட்டுக் கிண்டுறீங்க" என்று திகைப்புடன் குதித்தெழுந்தான் அந்தச் சேவகன். இந்த விபரீதத்தின் இரகசியத்தை அறிவது அருமையோ! இங்கு உட்கார்ந்திருந்தது உருவச்சிலையன்று. முன இவள் கண்டு மயங்கிய சிலைக்குத் தன்னுருவத்தைத்தந்த ஆளே இன்று இங்குஉட்கார்ந்தான். ஐயமே யாதுங் கொள்ளாமல் இவ்வேழைமாது அச்சிலையேதான் இது என்ற நிச்சயத்தால் அதனோடு விளையாடத் தலைப்பட்டாள் இப்பொழுது அவள் நிலை என்னையிற்று. ஆற்றமாட்டா அவ[illegible] தவிக்கின்றாள். எல்லோரும் சிரிப்[illegible]கம் புகுந்து அவள் நெஞ்சை அடைக்கின்றது. வியர்க்கின்றார்கள். கண் இருள்கின்றது. தலை சுழல்கின்றது. போதும்போதாக் குறைக்குத் தன் பரிபவத்தின் சான்றாகச் சினேகிதர்களும் சிலர் சேர்ந்ததை நினைக்க நினைக்கக் காதடைக்கின்றது. விக்குகின்றாள்.. "இந்தச் சன்மத்தை வைத்துக்கொண்டு இனியும் நான் எப்படி யிருப்பேன்" என்று இன்றைக்கும் அவள் அரைவிளையாட்டாக ஏங்கக் கேட்கலாம்.

பொய்யைமெய்யென முதலில் மயங்கி இருந்ததன் முடிவைக் காட்டுதற்கு இதனிற் சிறந்ததோர் நடைமுறை உதாரணந் தேடலரிது. இனி, அவ்வம்மை சித்திரமொன் றிருக்குமிடம் நாடமாட்டாள். முதலில் இவள் பொய்ச்சிலையை மெய்ச்சேவகன் எனமயங்கிஇருந்ததாற்றான் பின்னை இவ்விபரீதம் விளையலாயிற்று. மெய்யைப் பொய்யென்றுமயங்குமொருமாறுட்டம் முன்னுரைத்தபடி தீது பெரிதில்லாமற் கழியினும் கழியலாம். அப்படித் தீது உளதாயினும் அதன் கொடுமை மற்றையதுபோன்ற அவ்வளவு அதிகமாயிராது. பொய்யையோ மெய்யென்று ஒருதரம் மோசம்போனால் பிறகு தப்பிப் பிழைப்பது எவ்வகையிலும் இயலாதென நினைக்கவேண்டி யிருக்கின்றது. சிலந்தியைப்போல், தன் எட்டுக்கால்களாலும், அம்மயக்கவலைப்பட்டோர் மீது, தன் விஷமுடைய நூல்களைப் பின்னிவிடும்.

இக்காலப் பொதுஜன வாழ்க்கையின் பெரும்பகுதி இந்தச் சென்னைச் சித்திரகலாசாலை வாயில் காப்போன் விலாப்புறம் கிண்டலுண்ட சரித்திரத்தின் பிரதிபிம்பங்களே. பொய்யான பலவற்றை முதலில் மெய்யெனக் கருதும்படி பயின்றுவிட்டுப் பிறகு போய் மெய்யையெல்லாம் பொய்யென மருளப்புகுகின்றார் மாந்தரில் எண்ணிறந்தோர். மெய்யை மெய்யென மதியாது கண்டபடி கிண்டுகின்றனர். அம்மெய்மையோ, என்னவிது, என அலமந்து திகைக்கின்றது. மனிதர்களோ, இதனால், மானமும் தம்மரபிற்குரிய பெருமையும் இழந்து இழந்து சிறுமையுற்றுக் குறுகிவரக் காண்கின்றோம். பேசுவது வீரம்; மற்று, எத்திக்கு நோக்கினும், மக்களது சிந்தனை சொல் செயல்யாவும், மயக்கறு காட்சியராய் நடுநிலை நிற்கும் மேலோர் உள்ளம் கூசும்படி குலைந்து குவிகின்றன. உரிமை உரிமை என்றொரு ஊக்கம் இந்நாள் உலகெங்கும் உலவுகின்றது. உரிமை என்பதொன்று உண்மையில் இருப்பதாக யாம் எண்ணவில்லை. இவ்விடயத்தை முன்னொருமுறை [வால்யூம் 2, பக்கம் 41] 'உரிமையின் பொய்மை' என்னுந் தலைப்பின்கத்தில் விரித்துரைத்திருக்கின்றோம். சட்டங்களும் கோர்ட்டுகளுங் அதிகாரிகளுங் கிடக்க—மற்றவர் நமக்குத் தீமை செய்யப்படாது என்ற உரிமை நமக்கில்லை. நாம் மற்றவர்க்குத் தீமை செய்யலாகாது என்னுங் கடமையே நமக்குளது. ஒவ்வொரு உரிமைக்கும் ஈடாக ஒரு கடமையுண்டு என்பது மேனாட்டுச் சட்டசாஸ்திரத்தின் கொள்கை; ஆனால் ஒவ்வொரு கடமைக்கும் ஈடாக ஒரு உரிமையுண்டு என்று அவர்களுஞ் சொல்லவில்லை. நாம் இன்னுஞ் சிறிது முன்சென்று, தம் கடமையை மறந்தவர்களே உரிமையில் ஊக்கங்கொள்வார் என உரைக்கின்றோம். ஏனெனில், தாம் உரிமையென்று எண்ணியதெல்லாம் பொய்யாய்ப் போவதைக் காணக்காணத் தம் அகங்காரம் புண்படவே, புண்பட்ட அகங்காரம் (Wounded Pride) எல்லா வற்றிலும் பொல்லாததலின், தானும் அல்லலுற்று மற்றவரையும் அல்லலுக் கா[illegible]கின்றது.



# அப்பர்

## அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்.

## 24. யோகம்

[364-வது பக்கத் தொடர்ச்சி]

8. இராஜ யோகத்தின் சிறப்பு அங்கங்கள்

சமாதி (தொடர்ச்சி) சகஜநிலை.

அணுவுக்கணுவாய் அந்தரத்தில் பரமனைத் தரிசிப்பது சொரூபசமாதி யென்று கண்டோம். அம்மூலக் கருவி னிலக்கணம் அப்பர் கூறியவாறு.

கருவையென்றன் மனத்திருந்த கருத்தை ஞானக்
கடுஞ்சுடரைப் படிந்துகிடந் தமர ரேத்து
முருவையண்டத் தோருமுதலை யோத வேலி
யுலகினிறை தொழிலிறுதி நடுவாய் நின்ற
மருவைவென்ற குழன்மடவாள் பாகம் வைத்த
மயானத்து மாசிலா மணியை வாசத்
திருவெறும்பி யூர்மலைமேன் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப்பெற்றேனே.

திருவெறும்பியூர் - திருத்தாண்டகம் 3.

சூழுந் துயர மறுப்பார் போலுஞ்
தோற்ற மிறுதியாய் நின்றார் போலும்
ஆழுங் கடனஞ்சை யுண்டார் போலும்
ஆட லுகந்த வழகர் போலும்
தாழ்வின் மனத்தேனை யாளாக் கொண்டு
தன்மை யளித்த தலைவர் போலும்
ஏழு பிறப்பு மறுப்பார் போலும்
இன்னம்பர் தான்தோன்றி ஈச னாரே.

திருவின்னம்பர் - திருத்தாண்டகம் 5.

அப்பர் விளக்கிய அத்தன்மையை, தாயுமானவர் தன் துரிய அவஸ்தைநிலையை விளக்கிய பாக்காளாலும் அறியலாகும்.

பந்தமறு மெய்ஞ்ஞான மான மோனப்
பண்பொன்றை யருளி யந்தப் பண்புக்கேதான்
சிந்தையில்லை நானென்னும் பான்மை யில்லை
தேசமில்லை காலமில்லை திக்கு மில்லை
தொந்தமில்லை நீக்கமில்லை பிறிதுமில்லை
சொல்லுமில்லை யிராப்பகலாம் தோற்றமில்லை
அந்தமில்லை யாதியில்லை நடுவுமில்லை
யகமுமில்லை புறமுமில்லை யனைத்து மில்லை
இல்லை யில்லை யென்னினொன்று மில்லா தல்ல
வியல்பாகி யென்றுமுள்ள வியற்கை யாகிச்
சொல்லரிய தன்மையதாய் யான்று னென்னத்
தோன்றுதேல் லாம்விழுங்கும் சொரூப மாகி
அல்லையுண்ட பகல்போல வவித்தை யெல்லா
மடையவுண்டு தடையறவுன் னறிவைத் தானே
வெல்லவுண்டிங் குன்னையுந்தா னாகக் கொண்டு
வேதகமாய்ப் பேசாமை விளக்குந் தானே.

தாயுமானவர் - சிதம்பர ரகசியம்.

இத்தகைய சொரூபத்தை அந்தரங்கத்தில் கண்டு களித்த யோகியானவன் கண்ணைத்திறந்து வெளியே நோக்குவானாயின் காணப்படும் இயற்கைப் பொருள் யாவும், தான் உள்ளே கண்ட பொருளாய்த் திகழக் காண்பான். ஆனால் அந்நிலையானது முதலில் ஸ்திரமாயிராது. மறுபடியும் சடப்பொருளாய இயற்கையே தோன்றும். அவ்வாதனையை யொழிக்கும் நிமித்தம் பின்னும் கண்ணைமூடிச் சொரூப சமாதியில் ஆழ்வான். மீண்டும் வெளிவரின் ஜடமான வியற்கை சித்தான சிவமயமாய்க் காணப்படும்; அதை

பொறையுடைய பூமிநீ ரானாய் போற்றி
பூதப்படையாள் புனிதா போற்றி
நிறையுடைய நெஞ்சி னிடையாய் போற்றி
நீங்காதென் னுள்ளத் திருந்தாய் போற்றி
மறையுடைய வேதம் விரித்தாய் போற்றி
வானோர் வணங்கப் படுவாய் போற்றி
கறையுடைய கண்ட முடையாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.
முன்பாகி நின்ற முதலே போற்றி
மூவாத மேனி முக்கண்ணா போற்றி
யன்பாகி நின்றார்க் கணியாய் போற்றி
யாறேறு சென்னிச் சடையாய் போற்றி
யென்பாக வெங்கு மணிந்தாய் போற்றி
யென்சிந்தை நீங்கா விறைவா போற்றி
கண்பாவி நின்ற கனலே போற்றி
கயிலைமலை யானே போற்றி போற்றி.

திருக்கைலாயம் - திருத்தாண்டகம் 62.

என்று வெளிப்பார்வையில் காணப்படும் அந்தரங்கத் தாண்டமூர்த்தியைக் கண்டு ஆநந்திப்பதே சகச சமாதியாகும். முப்பட்டைப் பளிங்கால் (prism) உலகத்திலுள்ள பொருள்களைக் காணுவோமாயின் எவ்வளவு அழகான வர்ணங்களால் அவை ஜொலிக்கு மென்றறிவோம். ஆகையால் சித்திரத்திலுள்ள சிவப்பளிங்கின் தன்மையால் இயற்கைப் பொருள்களைக் காணுமிடத்து அப்பொருள்கள் கேவலம் ஜடப்பொருள்களாய்க் காணப்படாது சச்சிதானந்த இலக்கணம் வாய்ந்து யோகியின் கண்களுக்குப் பிரகாசிக்கும்:—

ஊனாகி யுயிராகி யதனு ணின்ற
வுணர்வாகிப் பிறவனைத்து நீயாய் நின்றாய்
நானேது மறியாமே யென்னுள் வந்து
நல்லனவுந் தீயனவும் காட்டா நின்றாய்
தேனாருங் கொன்றையனே நின்றி யூராய்
திருவானைக் காவிலுறை சிவனே ஞான
மானாயுன் பொற்பாத மடையப் பெற்று
லல்லகண்டங் கொண்டடியே னென்செய்கேனே?

திருவானைக்கா-திருத்தாண்டகம் 2.

இவ்வாறு திருநாவுக்கரசு மொழிந்தது வாசா கைங்கிரியமான புகழ்ச்சியன்றி - சித்தத்துள்ள சிவத்தை உலகத்திலுள்ள ஒவ்வொரு பொருள்தோறும் கண்டு களித்த இன்பம் பொங்குவதால் பாடியது இப்பாசுரமாகும். அப்பருக்குக் கைவல்யமான சகச சமாதி நிலையானது இயற்கையிலுள்ள யாவற்றையும் அவருக்குச் சிவமாய்க் காட்டியது.

விண்ணுகி நிலனுகி விசும்பு மாகி
வேலைசூழ் ஞாலத்தார் விரும்புகின்ற
எண்ணுகி யெழுத்தாகி யியல்பு மாகி
யேழுலகுந் தொழுதேத்திக் காண நின்ற
கண்ணுகி மணியாகிக் காட்சி யாகிக்
காதலித்தங் கடியார்கள் பரவநின்ற
பண்ணுகி யின்னமுதாம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்த வாறே.
திருப்பாசூர் - திருத்தாண்டகம் 1.

சகசசமாதி நிலையில் எல்லாப் பொருள்களையும் * பிரணவமயமாய்க் கண்ட வன்றெண்டர், தனது சுவாநுபூதியை

ஊனங்கத் துயிர் பாயுயிர்க் கெல்லாம்
ஓங்கா ரத்துரு வாகிநின் றுனை
வானங் கத்தவர்க் கும்மளப் பரிய
வள்ள லையடி யார்கள்த முள்ளத்
தேனங் கத்தமு தாகியுள் ளூறுந்
தேனைத் தினைத் தற்கரி யானை
மானங் கைத்தலத் தேந்தவல் லானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே.
சுந்தரர்.

வெளியிடுவது காண்க. இது மந்திரயோகத்தின் முடிவு.

“கண்டவிட மெல்லாம் கடவுள் மயமென்றறிந்து
கொண்ட நெஞ்சர் நேயநெஞ்சிற்கொண்டிருப்பதெந் [நாளோ”

என்றதுபோல் இம்மேலோர் சகசநிஷ்டையில்,

கருதரிய விண்ணே ! நீ யெங்குமாகிக்
கலந்தனையே யுன்முடிவின் காட்சியாக
வருபொருளைப் படியிருக்கும் சொல்லா லென்பேன்
மண்ணேயுன் முடிவிலெது வயங்கு மாங்கே
துரிய அறிவுடைச் சேடன் ஈற்றின் உண்மை
சொல்லானே சொல்லென்பேன் சுருதி யேநீ
ஒருவரைப்போல் அனைவருக்கும் உண்மையாமுன்
உரையன்றேஉன் முடிவையுரை நீயென்பேன்
தாயுமானவர் - சிதம்பர ரகசியம் 27.

தாயுமானவர் தான் பெற்ற ரகசிலையின் இலக்கணத்தை விவரிப்பது காண்க:—

பாராதி யண்டங்கள் அத்தனையும் வைக்கின்ற
பரவெளியி னுண்மை காட்டிப்
பற்றுமன வெளிகாட்டி மனவொளியி னில்தோய்ந்த
பாவியேன் பரிசு காட்டித்
தாராள மாய்நிற்க நிச்சிந்தை காட்டிச்
சதாகால நிஷ்டை யெனவே
சகசநிலை காட்டினை ; சுகாதீத நிலையந்
தனைக்காட்ட நாள் செல்லுமோ

காரார வெண்ணரு மநந்த கோடிகணின்று
காலூன்றி மழைபொழிதல் போல்
கால்வீசி மின்னிப் படர்ந்துபர வெளியெலாங்
கம்பியா னந்தவெள்ளம்
சேராத பொழியவே கருணையின் முழங்கியே
தொண்டரைக் கூவுமுகிலே !
சுத்தநிர்க் குணமான பரதெய்வமே பரஞ்
சோதியே சுகவாரியே.
தாயுமானவர் - சுகவாரி 8.

கூடுதலுடன் பிரிதலற்று, நிர்த்தொந்தமாய்க்
குவிதலுடன் விரிதலற்றுக்
குணமற்று, வரவினொடு போக்கற்று, நிலையான
குறியற்று, மலமுமற்று,
நாடுதலு மற்று, மேல் கீழ்நடுப் பக்கமென
நண்ணுதலுமற்று, விந்து
நாதமற்று, ஐவகைப் பூதபேத முமற்று,
ஞாதுருவின் ஞான மற்று
வாடுதலு மற்றுமே லொன்றிரண்டற்று
வாக்கற்று மனமுமற்று
மன்னுபரி பூரணச் சுகவாரி தன்னிலே
வாய்மடித் துண்ட வசமாய்த்
தேடுதலு மற்றவிட நிலையென்ற மௌனியே
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தட்சிணு மூர்த்தியே
சின்மயா னந்த குருவே.
ஷை சின்மயானந்தகுரு 8.

சகசசமாதியின் முடிவே மேற்கண்ட தாயுமானவர் செய்யுளிற் கண்டதாகும். இதைத் துரியாதீத ஆரம்ப மென்பர். இந்நிலைக்கு வந்த ஜீவனுனவன் பிராணவாயு சம்பந்தமுமின்றி மூலத்தில் தனித்துச் சின்மாத்திர சொரூபமாய் விளங்கும். இந்நிலையிலாழ்ந்தோர் மீண்டும் உலக விவகாரத்திற்கு வருவதில்லை. ஆகையால் முற்கூறிய துரியாவஸ்தை நிலையை உணர்த்துவதுபோன்ற பதிகங்கள் வேறெந்நூலிலும் காணப்படா. ஆயினும் அந்நிலையை அடியில் வரும் திருநாவுக்கரசு நாயனர் திருப்பதிகம் போன்ற பாக்களால் சற்று அநுமானிக்கவாகும் :...

விண்ணுனை விண்ணவர்கள் விரும்பி வந்து
வேதத்தாய் கீதத்தாய் விரவி யெங்கும்
எண்ணுனை யெழுத்தானைக் கடலே ழானை
இறையானை யெம்மிறையே யென்று நிற்கும்
கண்ணுனைக் காரானைப் பாரு மானைக்
கழிப்பாலை யுள்ளுறையுங் கமல பாதர்
மண்ணுனை மாயக் குரம்பை நீங்க
வழிவைத்தார்க் வவ்வழியே போது நாமே
திருக்கழிப்பாலை - திருத்தாண்டகம் 5.

இயல்பாய வீசனை யெந்தை தன்னை
யென்சிந்தை மேவி யுறைகின் றானை
முயல்வாய மூர்த்தியைத் தீர்த்த மான
தியம்பகன் திரிசூலத் தன்ன கையன்
கயல்பாயும் கண்டல் சூழ் வுண்ட வேலிக்
கழிப்பாலை மேவிய கபாலப்பனர்
மயலாய மாயக் குரம்பை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போது நாமே.
திருக்கழிப்பாலை - திருத்தாண்டகம் 8.

* நித்தியமாய் நிர்மலமாய் நிட்களமாய்
நிராமயமாய் நிறைவாய் நீங்காச்
சுத்தமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த்
துரியநிறைச் சுடரா யெல்லாம்
வைத்திருந்த தாரகமாய் ஆநந்த
மயமாகி மனவாக் கெட்டாச்
சித்துருவாய் நின்ற வொன்றைச்
சுகாரம்பப்பெருவெளியைச் சிந்தைசெய்வாம்.
தாயுமானவர் - பொருள்வணக்கம் 1.



எண்ணரிய அகிலாண்டகோடி அண்ட சராசரங்களையும் தன்னருள் வெளியில் இலகவைத்து நிற்கும்படி எவராலும் நிச்சயிக்கக் கூடாத அற்புதமான கைவல்யநிலையான மேலாம் அத்துவித நிலையைத் தாயுமானவர் சில பாக்களில் உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளக்குகின்ருர். அதன் சாரமுற்றும் நாம் கண்டறிவது மிகவும் கடினமெனினும் அடியிற் கண்ட பாக்கள் நமக்கு அப்பதவியை இன்றே கொடுப்பது போல் மனதில் ருசிக்கக் காட்டுவதைக் காண்க:—

ஒன்றிரண்டாய் விவகரிக்கும் விவகாரங்
கடந்தேழாம் யோக பூமி
நின்று தெளிந் தவர் பேசா மௌன
நியாயத்தை நிறை நிறைவைத்தன்னை
அன்றியொரு பொருளிலதாய் எப்பொருட்கும்
தான் முதலா யசலமாகி
என்று முள்ள இன்பத்தைத் தண்ணென்ற
சாந்தபத இயற்கை தன்னை. (2)
பதமூன்றும் கடந்தவர்க்கு மேலான
பதப் பரிசு காட்டிச்
சதமாகி நிராலம்ப சாக்ஷியதாய்
ஆரம்பத்” தன்மையாகி
விதமியாவுங் கடந்த வித்தை
யெனுமிருளைக் கீண்டெழுந்து விமலமாகி
மதமாறுங் காணுத ஆநந்த
சாகரத்தை மௌன வாழ்வை. (3)
வாழ்வனைத்துந் தந்தவின்ப மாகடலை
நல்லமிர்தை மணியைப் பொன்னைத்
தாழ்வறவென் னுளத்திருந்த தத்துவத்தை
யத்துவித சாரந்தன்னைச்
சூழ்பெரும்பே ரொளியை யொளிபரந்த
பலவெளியை யின்பச்சுகத்தைமாறு
தேழுலகுங் கலந்தின்றும் நாளையா
யென்றுமா மியற்கை தன்னை. (4)
தன்னையறிந் தவர்தம்மைத் தானுகச்
செய்தருளுஞ் சமத்தை லோகம்
பின்னை நிகர்த் திடவழியாச்
சொரூபானந்தச்சுடரை வேதமாதி
என்னையறி வரிதென்னச்
சமயகோ டிகளிடைய விடையறுத
பொன்னைவிரித் திடுமுலகத் தும்பரு
மிம்பரும் பரவும் புனித மெய்யை! (5)
பரவரிய பரசிவமாய், அதுவெனலாய்
நானெனலாய்ப் பாசசாலம்
விரவி நின்ற விசித்திரத்தை
ஐக்யபதத் தினிதிருந்த விவேகந்தன்னை
இரவுபகல் நினைப்பு மறப்பெனுந்
தொந்தம் அறியார்கள் இதயவேதச்
சிரமெனவாழ் பராபரத்தை ஆநந்தம்
நீங்காத சிதாகாசத்தை. (6)
அத்துவித அநுபவத்தை அனந்தமறை
யின்ன மின்ன மறியோ மென்னும்
நித்தியத்தை நிராமயத்தை நிர்க்குணத்தைத்
தன்னருளால் நினைவுக்குள்ளே
வைத்து வைத்துப் பார்ப்பவரைத் தானுக
வெந்நாளும் வளர்த்துக் காக்குஞ்
சித்தினைமாத் தூவெளியைத் தன்மயமாம்
ஆநந்தத் தெய்வந் தன்னை. (7)
தன்னிலே தானுக நினைந்து கனிந்
தவிழ்ந்துசுக சமாதியாகப்
பொன்னிலே மணிபோலும் மாயைதரு
மணமே யுன்புரைகள் தீர்ந்தாய்
என்னிலோ யான்பிழைப்பேன்
எனக்கினியாருன் போல்வாரில்லை இல்லை
உன்னிலோ திருவருளுக் கொப்பாவாய்
என்னுயிர்க் கோருறவு மாவாய். (8)
தாயுமானவர் - மண்டலத்தின்

திருநாவுக்கரசு நாயனர், சகச சமாதி முடிவில் ஜீவன் அநுபவிக்கும் தத்துவ நிலைமையைச் சில பாசுரங்களில் குறிப்பிடுகின்றனர். அவற்றிற்குப் பல வாதிகள் பலவாறு பொருள் கூறலாகும். ஆகையால் அந்தப் பேதங்களை அறவேவிட்டு வாகீசரது திருவாக்கின் சாரம் பற்றி அதை யனுபவிப்போம்.

ஊனு லாவி யுயிர்க்கும் பொழுதெலாம்
நானி லாவி யிருப்பனேன் னுதனைத்
தேனி லாவிய சிற்றம் பலவனர்
வானி லாவி யிருக்கவும் வைப்பரே.
சிட்டர் வானவர் சென்று வரங்கொளுஞ்
சிட்டர் வாழ்தில்லை சிற்றம் பலத்துறை
சிட்டன் சேவடி கைதொழச் செல்லுமச்
சிட்டர் பாலணு கான்செறு காலனே.
ஒருத்த னுருல கங்கட் கோருசுடர்
திருத்த னுர்தில்லைச் சிற்றம் பலவனர்
விருத்த னுரிளை யார்விட முண்டவெம்
அருத்த னுரடி யாரை யறிவரே.
விண்ணி றைந்ததொர் வெவ்வழ லின்னுரு
எண்ணி றைந்த விருவர்க் கறிவொணுக்
கண்ணி றைந்த கடிபொழி லம்பலத்
துண்ணி றைந்துநின் றுடு மொருவனே.
கோயில் - திருக்குறுந்தொகை 5, 6, 7, 8

என்றும், மற்றும் அத்திருப்பதியின்கண்ணே பாடிய புக்க திருத்தாண்டகத்தில்,

இறந்தார்க்கு மென்று மிறவா தார்க்கு
மிமையவர்க்கு மேகமாய் நின்று சென்று
பிறந்தார்க்கு மென்றும் பிறவா தார்க்கும்
பெரியான்றன் பெருமையே பேச நின்று
மறந்தார் மனத்தென்று மருவார் போலு
மறைக்காட் டுறையு மழுவாட் செல்வர்
புறந்தார் சடைதாழப் பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலத்தே புக்கார் தாமே.
புக்க திருத்தாண்டகம் 7.

எனப் பாடுவது காண்க. இப்பதிகங்களில் சிருஷ்டி, திதி ஒடுக்கமென்னும் முத்தொழில்களின் மர்மங்களும் அடங்கியிருப்பதுடன் ஜீவன்முத்தன் மாயையினின்று நீங்கிச் சிதாகாச வடிவாய்த் தான் வேறு, தலைவன் வேறில்லாமலிருக்குந் தன்மையின் சூட்சுமங்களும் காட்டும். இத்தன்மை வேண்டி வருந்திய தாயுமானர் திருவாக்கைக் காண்க :—

நீங்கா துயிருக் குயிராகி
நின்ற நிலையறிந்தே
தூங்காமல் தூங்கின் அல்லாதே
யெனக்குச் சுகமு முண்டோ ?
ஓங்கார மாமைந் தெழுத்தாற்
புவனத்தை யுண்டுபண்ணிப்
பாங்காய் நடத்தும் பொருளே
யகண்ட பரசிவமே.

எனக் காரண பஞ்சாட்சரம், மகா காரணம், ஈச்வராகார மென்னும் தத்துவங்களை இந்நிலையால் சொல்லாதுபோற் சொல்லி, மந்திரயோகத்தினுக்கும் முடிவாய், இராஜயோக சமாதியின் இறுதியாய், மீளாத இன்பவீடாய், ஆரணவாகமம் எல்லாம் உரைத்த அருளான மௌனகாரண மூலமாய், எல்லாச் சித்திகளுக்கும் பிறப்பிடமாம் பதத்தை, உணர்த்துகின்றனர். ‘இருநிலனுய்த் தீயாகி’ யென்ற திருப்பாட்டின் பெருநிலையைக் கண்டறிந்து பேச்சறுவ தெந்நாளோ.

(சமாதி முற்றிற்று.)

தோலாமொழித்தேவர் இயற்றிய

# சூளாமணி

[367-வது பக்கத் தொடர்ச்சி]

### 4. இரதநூபுரச் சருக்கம்.

193. பாசடைப் பரப்புடைப் பழன நாடனை
ஆசிடை கொடுத்தவர் இருக்க வென்றலும்
தூசுடை மணிக்கலை மகளிர் சூழ்தர
ஏசிடை யிலாதவன் இருக்கை யெய்தினன். 76.

அவர் - அச்சாரண முனிவர், பசுமை அடைப் பரப்பு உடை - பசுமையான இலைகளைக்கொண்ட பரந்த நீர்நிலைகளையுடைய, பழனம் நாடனை - வயல்கள் சூழ்ந்த நாட்டுக்கு அரசனான அவனை, ஆசியிடை கொடுத்து - ஆசீர்வதித்தலைச்செய்து, இருக்க-உட்காருக, என்றலும் - என்று அருளலும், ஏசு இடை இலாதவன் - பழிப்பதற்கு இடமொன்றும் இல்லாதவனாகிய அம்மன்னன், தூசு உடை மணிக்கலை - மேலே ஆடை சூழ்ந்த இரத்தின மணிகள் கோத்த மேகலாபரணத்தை அணிந்த, மகளிர் சூழ்தர - மகளிர் தன்னைச் சுற்றிநிற்க, இருக்கை எய்தினன் - ஆசனத்தில் அமர்ந்தான்.

பாசடை - பசுமை + அடை. பரப்பு - நீர்ப்பரப்பு. பழனம்-வயல்; வயல் சூழ்ந்த மருதநிலவைப்புமாம். ஆசிடை - ஆசியிடை (ஆசியிடுதல்) என்பதின் விகாரம்: ஆசி-ஆசீர்வாதம். ஆசு + இடை எனக்கொண்டு 'ஆசு' என்பதை 'ஆசி' என்பதன் விகாரம் என்றுவது, ஆசிடை' என்பது 'ஆசிஷம்' என்னும் வட மொழியின் திரிபு என்றுவது கொள்க. கலை - 'மேகலை' என்பதின் குறை; இது மகளிர் தமது ஆடையினுள்ளே அரையில் கட்டிக்கொள்ளும் ஆபரண விசேஷம். ஏசுஇடை: இடை - இடம்.

'பாசிடைப்பரப்பு' என்றபாடத்துக்குப் பசிய நெற் பயிர்களையுடைய வயற் பரப்பு, என்க.

---

194. தாளுயர் தாமரைத் திருவும் தண்கதிர்
நீளெழி லாரமு நிழன்று கண்குலாந்
தோளிணை செவ்வியோ வென்னச் சூழொளி
வாளவன் மணிமுடி வணங்கி வாழ்த்தினன். 77

தாள் உயர் தாமரை-தண்டின்மேலோங்கிய தாமரையில் வாழும், திருவும் - ஜயலக்ஷ்மியும், தண் கதிர் - குளிர்ந்த கிரணங்களை வீசும், நீள் எழில் - மிக்க அழகோடு கூடிய, ஆரமும் - முத்து மாலையும், நிழன்று - விளங்கி, கண்குலாம்-கண்டார் கண்களை மகிழ்விக்கும், தோள் இணை-உனது தோள்களிரண்டும், செவ்வியோ-சௌக்கியமாய் இருக்கின்றனவா, என்ன - என்று க்ஷேமம் விசாரிக்க, சூழ் ஒளி வாள் அவன் - ஒளி சூழ்ந்த வாளையேந்திய அவன், மணிமுடி வணங்கி - தனது தலையால் வணங்கி, வாழ்த்தினன் - அவர்களை நமஸ்காரம்பண்ணித் துதித்தான்.

திரு - இலக்ஷ்மி; இங்கே அவர் எண்மருள் ஒருத்தியாகிய வீரலக்ஷ்மி. குலாம் - குலாவும். செவ்வியோ - செவ்வியவோ; வலியவோ. மணிமுடி - கிரீடத்தை அணிந்த தலை.

---

195. முனிவருட் பெரியவன்
முகத்தை நோக்கியொன்
றினிதுள துணர்த்துவ
தடிகள் என்றலும்
பனிமலர்த் தாமரைப்
பழன நாடனைக்
கனியமற் றின்னணங்
கடவுள் கூறினன். 78.

(பின்பு மன்னன்), முனிவருள் பெரியவன் - அம்முனிவரிருவருள் மூத்தவனுடைய, முகத்தை நோக்கி—, 'அடிகள் - அடிகளே, ஒன்று இனிது உணர்த்துவது உளது'-நான் உமக்கு வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்வது ஒன்று உளது', என்றலும்-என்று சொன்னவுடன், கடவுள் - அம்முனிவன், கனிய - உள்ளங்கனிந்து (கருணையோடு), பனிமலர் தாமரை பழனம் நாடனை-குளிர்ந்த தாமரை மலர்கள் நிறைந்த வயல்நாட்டுக்கு அரசனாகிய அவனுக்கு, இன்னணம் - இவ்வாறு (பின்வருமாறு), கூறினன் - மறுமொழி தந்தருளினன்.

அடிகள் - அண்மை விளியாதலின் இயல்பாய் நின்றது. கனிய - கனிந்து.

---

196. துன்னிய வினைப்பகை
துணிக்குந் தொன்மைசால்
இன்னுரை யமிழ்தெமக்
கீமின் என்பதாம்
மன்னநின் மனத்துள
தென்ன மாமணிக்
கன்னவில் கடகக்கை
கதழக் கூப்பினன். 79.

'துன்னிய - உயிர்களைப்பற்றிய, வினைப்பகை - வினைகளாகிய பகையை, துணிக்கும் - அறத்தொழிக்கும், தொன்மைசால் இன் உரை - பழமை நிரம்பிய அறவுரைகளாகிய (தருமோபதேசமொழிகளாகிய), அமிழ்து - அமிர்தத்தை, எமக்கு -எங்களுக்கு, ஈமின் - உரைத்தருளும்', என்பது-என்னுங் கருத்தே, மன்ன - மன்னனே, நின் மனத்து உளது-உன் மனதிலுள்ளது, என்ன - என்று சொல்லக்கேட்டு, (அவன் வியந்து), மா மணி கல் நவில் - பெரிய ரத்தினங்கள் இழைத்துச் செய்த, கடகம் கை - கடகாபரணத்தை அணிந்த கைகள் இரண்டையும், கதழ - விரைவாக, கூப்பினன் - தலையின்மேற் குவித்தான்.

---

வேறு

197. மெய்யறி விலாமை யென்னும்
வித்தினிற் பிறந்து வெய்ய
கையறு வினைகள் கைபோய்க்
கடுந்துயர் விளைத்த போழ்தில்
மையுற வுழந்து வாடும்
வாழுயிர்ப் பிறவி மாலை
நெய்யுற நிழற்றும் வேலோய்
இனைத்தென நினைக்க லாமோ. 80.



நெய்யுற நிழற்றும் வேலோய்-நெய்பூசப் பெற்றுப் பளபளவென்று பிரகாசிக்கும் வேலையுடைய மன்னனே, மெய் அறிவு இலாமை - உண்மை ஞானம் இல்லாமை (பேதைமை), என்னும் வித்தினில்பிறந்து-என்னும் விதையிலிருந்து முளைத்தெழுந்து, கையறு வினைகள் - செயலற்றுத் திகைத்தலைச் செய்யும் வினைகளாகிய கிளைகள், கைபோய் - நாற்புறமும் கிளைத்து வளர்ந்து, கடுந்துயர் விளைத்த போழ்தில் - கடுந்துயரமாகிய பலனை விளைத்தபோது, மையுற - மையலுற்று (மதிமயங்கி), உழந்துவாடும் - வருந்திச் சோரும், வாழ் உயிர்-உடலோடு பொருந்தி வாழும் உயிர்களின், பிறவிமாலை - பிறவிகளின் தொடர்ச்சியை, இனைத்து என - இத்தனைதான் என்று, நினைக்கல் - கணக்கிட்டு வரையறுத்தல், ஆமோ - கூடுமோ ?

கையறுதல் - செயலற்றுப்போதல்; இன்னது செய்வதென்று அறியாது திகைத்தல். கைபோய்: கை - பக்கம்; போய் - கிளைகள் பணைத்தெழுந்து.

---

198. சூழ்வினை துரப்பச் சென்று
சூழ்வினைப் பயத்தி னாலே
வீழ்வினை பிரிது மாக்கி
வெய்துற விளிந்து தோன்றி
ஆழ்துய ருழக்கு மந்தோ
அளியற்ற யறிவில் சாதித்
தாழ்வினை விலக்குஞ் சார்வு
தலைப்படா வளவு மென்றான். 81.

அளி அற்ற - பிறர்கண்டு இரங்குவதற்கு உரியவல்லனவான, அறிவில் சாதி - மெய்யறிவு தலைப்படாத உயிர்கள், தாழ்வினை - தாழ்ச்சியை (இழிந்த பிறப்புக்களை), விலக்கும் - தடுக்கத்தக்க, சார்வு - துணை, தலைப்படா அளவும் - கிட்டாதவரையிலும், சூழ்வினை துரப்ப சென்று - உயிர்களை விடாது சூழ்ந்து தொடரும் வினையாற் செலுத்தப்பட்டு இவ்வுலகில் பிறந்து, சூழ் வினை பயத்தினால் - அவ்வினையின் பயனாக, வீழ் வினை பிரிதும் ஆக்கி - அப்பிறப்பினும் கீழான கதிகளிலே தள்ளும் மற்றும் பல கருமங்களைச் செய்து, வெய்துற விளிந்து - துன்புற்று இறந்து, தோன்றி - மறுபடியும் பிறந்து, (இவ்வாறு இறந்தும் பிறந்தும்), அந்தோ - ஐயோ, ஆழ்துயர் உழக்கும்-ஆழ்ந்த துயரக் கடலினகப்பட்டு வருந்தும்.

பயம் - பயன், பலன். சார்வு - துணையாகச் சேரும் முதற் பொருள். 'சார்புணர்ந்து சார்பு கெட' என்றார் தேவரும். (திருக்குறள். 359).

---

199. காதியங் களைகள் சீறும்
காமரு நெறிக்குங் கண்ணைப்
போதியங் கிழவர் தங்கள்
தியானத்துப் புலங்கொண் டேத்தி
ஆதியந் தகன்று நின்ற
வடிகளே சரணங் கண்டாய்
மாதுய ரிடும்பை தீர்க்குஞ்
சரணெனப் படுவ மன்னா. 82.

மன்னா-அரசனே, காதி களைகள்-காதிகரும இனங்களை, சீறும் - ஒழித்தகற்றும், காமரு நெறிக்கு - யாவராலும் விரும்பப்படும் முத்திநெறிக்கு, கண்ணாய்-வழிகாட்டுந் துணையென, போதி கிழவர்-ஞானிகள், தங்கள் தியானத்து - தங்களுடைய தியானத்துக்கு, புலம் கொண்டு - புலனாக (இலக்காகக்) கொண்டு, ஏத்தி - ஏத்தும் வண்ணம், ஆதி அந்து அகன்று - ஆதியும் அந்தமும் இன்றி, நின்ற - திருவுருக் கொண்டு நின்ற, அடிகள் சரணமே - அருகதேவனுடைய சிபாதங்களே, மா துயர் இடும்பை - ஜனன மரணமாகிய பெருந்துயரத்துக் கேதுவாகிய துன்பத்தை, தீர்க்கும்- போக்குவதாகிய, சரண் எனப் படுவ - அடைக்கலம் என்று சொல்லப்படுவன, கண்டாய் - இதை நீ அறிவாயாக.

காதி - காதி கருமங்கள், முத்தியைக் கெடுக்கும் வினைகள். காதியம், போதியம்; - அம், சாரியை. காமரு - காமமருவு என்பதன் விகாரம் - 'காமம் வரு, என்பதின் விகாரமென்பர் அடியார்க்கு நல்லார். அந்து - அந்தம் (கடைக் குறை). அடிகளே சரண் - அடிகள் சரணே என்று ஏகாரத்தைப் பிரித்துக் கூட்டிக்கொள்க. அடிகள் சரண், ஆறும் வேற்றுமைத்தொகை. போதி - ஞானம், பேரறிவு. ஏத்தி-ஏத்த. கண்ணாய் ஏத்தி நின்ற சரணம், என்க - சரணம்-அடைக்கலம், புகலிடம்; shelter, refuge.

---

200. மெய்ப்பொரு டெரிதல் மற்றப்
பொருண்மிசை விரிந்த ஞானம்
அப்பொருள் வழாத நூலி
னருந்தகை யொழுக்கந் தாங்கி
இப்பொரு ளிவைகள் கண்டாய்
இறைவனால் விரிக்கப் பட்ட
கைப்பொரு ளாகக் கொண்டு
கடைப்பிடி கனபொற் றாரோய். 83.

கனம் பொன் தாரோய் - தங்கத்தாற்செய்த ஆரத்தை அணிந்தவனே, மெய்ப்பொருள் தெரிதல் - உண்மைப் பொருள் இவையென அறிதலாகிய நன்ஞானம்; அப்பொருள் மிசை விரிந்த ஞானம் - (எட்டு உறுப்போடு) விரிந்ததான அம்மெய்ப்பொருள்களைநன்றாய் ஆராய்ந்து தெளிதலாகியநற்காட்சி, அப்பொருள் வழாத நூலின் - அப்பொருள்களைக் குறைவற உள்ளபடியுணர்த்தும் ஆகமங்களிற் கூறிய, அரும் தகை ஒழுக்கம் - அநுஷ்டிப்பதற்கு அரியவாகிய நல்லொழுக்கம், இப்பொருள் இவைகள் - ஆகிய இரத்தினத்திரயம் எனப்படும் இம்மூன்றுமே, இறைவனால் விரிக்கப்பட்ட-அருகதேவனால் விரிவாக ஓதப்பட்டவை. காண்டி - இதனை நீ அறிவாயாக. தாங்கி - இவைகளைத் தவறாமல் மேற்கொண்டு, கைப்பொருள் ஆகக்கொண்டு - சித்தித்த (கைகூடிய) பொருளாகக் கொண்டு, கடைப்பிடி - மறவாமல் உறுதியாகப் பற்றுவாயாக.

உண்மைப் பொருள்கள் இவையென உணர்தல் நல்ஞானமென்றும், அவற்றை ஐயந்திரிபற நன்கு தெளிதல் நற்காட்சியென்றும், அவைகளை விரித்துரைக்கும் அருகாகமங்களில் விலக்கியவைகளைத்தவிர்த்து விதித்தவைகளைச் செய்தல் நல்லொழுக்கம் என்றும் ஜைன நூல் கூறும். கன பொன் - (இருபெயரொட்டுப் பண்புத் தொகை.) கனம்-கனகம், பொன். கன பொன் - கனமான பொன் என்றுமாம்.

---

# பிஸாரோ

(Copy-right with Messrs. C. Coomaraswamy Naidu & Sons.)

ரிச்சர்ட் பிரின்ஸ்லே ஷெரிடன் எழுதிய வோர் ஆங்கில நாடகத்தின் மொழிபெயர்ப்பு

[ 371-வது பக்கத் தொடர்ச்சி ]

## ஐந்தாவது அங்கம்

### மூன்ரும் களம்

இடம்—அத்தாலிபாவின் கூடாரம்.

[கோராவும் அலான்ஸோவும் பின்தொடர அத்தாலிபா வருகின்ருன்.]

**கோரா**—ஹோ! என்னை விட்டுத் தப்பியோடப் பார்க்காதே. அத்தாலிபா! தன் னரசனுக்கன்றி வேறு யாரிடம் என்னைப்போன்ற பாலனை இழந்த தாயொருத்தி தன் குறைகளைச் சொல்லி யழப்போகின்ருள்! கடவுளோ என் வேண்டுகோளுக்குச் செவிகொடுக்கவில்லை! எனது அலான்ஸோ உனக்காகப் போர் புரியவில்லையா? எனது அவ் வினிய பாலகனும், அவனைத் திருப்பிக்கொடுப்பாயாயின், உனக்காகப் போர்முகம் நிற்கும் ஒரு புருடனுக மாட்டானு!

**அலான்ஸோ**—எனதினிய காதலி—ஐயோ, மனமுடைந்த கோரா—இதனுல் நீ நமது காவலன்தன் உள்ளத்தைப் புண்படுத்துகின்ருயே யன்றி உனக்குற்றதை ஆற்றிக்கொள்ளவில்லை.

**கோரா**—நமது காவலனு யிருந்து—நம் குழந்தையைத் திருப்பிக்கொடுக்கச் சக்தியில்லையா?

**அத்தாலிபா**—தகுதிக்குத் தக்க வெகுமதியளிக்கும் பொழுதும், குடிகளுக்குற்ற குறைகளைத் தீர்க்கும் பொழுதுந்தான் நான் உண்மைபாக ஓர் அரசனின் மகிமையை யுணர்கின்றேன்—ஆனல், அவர்கள் வருந்தக் கேட்டுக் குறைதீர்க்க முடியாவிடில் அப்பொழுதே,மனிதர்க்குரிய சக்தியின்மையைக் கண்டு வியாகுலப்படுகின்றேன்.

**சேவகர்கள்**—(உள்ளே) ரோலா! ரோலா! ரோலா!

[ரோலா, இரத்தமொழுகக் குழந்தையுடன் வருகின்ருன்.]

**ரோலா**—கோரா, உன் குழந்தை!

[கோராவிடம் கொடுத்துவிட்டுக் கீழே விழுகின்ருன்.]

**கோரா**—ஹோ, தெய்வமே! இதன்மேல் இரத்தமா!

**ரோலா**—எனது இரத்தம் அது—கோரா!

**அலான்ஸோ**-என்ன, இறக்கின்றனையோ, ரோலா!

**ரோலா**—உனக்காகவும் கோராவிற்காகவும்.

(சாகின்ருன்.)

[ஒரேநோ வருகின்ருன்.]

**ஒரேநோ**—வஞ்சகப் புலையன் எவனே நம் அந்தரங்க வழியைக் காட்டிக்கொடுத்துவிட்டான். பகைவர், புகலிடம் காத்துநிற்கும் நமது சிறுபடையை எதிர்க்கின்ருர்.

**அலான்ஸோ**—ஒருநிமிடமும் தாமதிக்கவேண்டாம். போர்வீரர்களே, துரிதப்படுங்கள்! உங்கள் பேதை மனைவிமக்களுங்களைக் கதறியழைக்கின்ருர். இத்திவ்ய வீரனது உடல் வண்டியில் வரட்டும். இக்காட்சியே நமதாட்களின் வஞ்சினத்தை யாவேச மாக்கிவிடும். இதோ, கொடியோய் பிஸாரோ, நம்மிருவரில் ஒருவர் காலம் குறுகிவிட்டது! போங்கள்! ரோலாவின் திருநாமத்தை நினைத்துப் பழிவாங்க எதிர்ப்பீர்கள்.

(போகின்ருர்.)

---

### நான்காம் களம்

பாறைகள் நடுவில் அகன்ற இடம்.

[பிஸாரோ, அல்மாக்ரோ, வல்வெர்தே, ஸ்பானிய போர் வீரர்கள் வருகின்ருர்]

**பிஸாரோ**—நல்லது! அவர்கள் நம்மைப் புடைசூழ்வார்களாயின் நாம் நடுவிலகப்பட்டு நசிக்கவேண்டியதுதான். ரோலாவும் அலான்ஸோவும் எங்கே போய்த் தலையைச் செருகிக்கொண்டுவிட்டனர்!

[அலான்ஸோவும் ஒரேநோவும் போர்வீரர்களுடன் வருகிருர்.]

**அலான்ஸோ**—அலான்ஸோவுக்கு அவனேமறுமொழிதருகின்ருனிதோ. ரோலாவுக்காக அலான்ஸோவின் வாள் பேசும்.

**பிஸாரோ**—உன் ஆட்களின் தொகைவலியால் இவ்விதம் இறுமாந்துரைக்கின்ருய், நீ! பிஸாரோவுடன் தனிப்போர்புரியத் துணிவாயோ?

**அலான்ஸோ**—பெருவியர்களே, இருக்குமிடத்தில் நிற்பீர்கள். இப் போரை நாங்களே முடிக்கின்ருேம்.

**பிஸாரோ**—ஸ்பானியர்களே! நீங்களு மப்படித்தான்.

[பிஸாரோவும் அலான்ஸோவும் எதிர்த்துத் தனிப்போர் புரிகின்றனர். அலான்ஸோவின் கேடயம் உடைபடுகின்றது; பிஸாரோ அவனைக் கீழே தள்ளி முழங்காலால் அழுத்திக் கொல்கின்ருன்.]

**பிஸாரோ**—இதோ, துரோகி, உன் மார்பில்—

[இத் தருணத்தில் கன்னிமாட உடை தரித்து எல்விரா திடீரென்று வருகின்ருள். பிஸாரோ * திடுக்கிட்டுப் பின்னிடைகின்ருன். அலான்ஸோ எழுந்து மறுபடிபோர்புரிந்து பிஸாரோவைக் கொன்றுவிடப் பெருவியர் ஜயபேரிகை முழங்குகின்றது.]

[அத்தாலிபா வருகின்ருன்.]

**அத்தாலிபா**—எனது தீர அலான்ஸோ!

(தழுவுகின்ருர்.)

**அல்மாக்ரோ**—நாங்க ளடங்கிவிட்டோம். உயிர்ப்பிச்சை தரவேண்டும். இந்தக்கணமே உங்களூர்விட்டகல்கின்ருேம்.

**வல்வேர்தே**—எல்விராவின் உயிரைக் காப்பாற்றினது நானே யென்று அவளே சொல்வாள். உன்னுயிரைக் காப்பாற்றியது அவளே—ஆகையால்...

**அலான்ஸோ**-பயப்படாதீர். உங்களுக் கொன்றும் ஆபத்தில்லை.

[ஸ்பானியர் தங்க ளாயுதங்களைக் கொடுத்துவிடுகின்ருர்.]

**எல்விரா**—வல்வெர்தேசொல்வது வாய்மையே-ஆனலவன் என்னை இவ்விடம் சந்திக்க எதிர்பார்க்கவில்லை. ஏதோ என் மனத்தின் மாயை என்னை இவ்விடம் வர ஏவிற்று.

**அலான்ஸோ**— எல்விரா, என்னை நீ இரட்சித்தாய்! நானும் அத்தாலிபாவும், விடுதலைபெற்ற இந்நாடும் உனக்குட்பட்டிருக்கும் கடமை இவ்வளவென்று சொல்ல இயலாது! நன்றிபாராட்டும் எங்கள் நடுவில் நீ வாழ்வாயானல்.—

**எல்விரா**—அலான்ஸோ, இல்லை எனது வாழ்நாட்களின் முடிவு இன்னதென்று நிச்சயமாய்விட்டது. நான் என்னதான் புன்னகையுடன் திரிந்திருந்தபோதிலும் பலவித பாபச்செய்கைகளால் எப்பொழுதுங் கைப்புண்டிருக்கும் என்னுவி உய்வதற்கோர் வழிதேடவேண்டியவளாயிருக்கின்றேன். மனம்நொந்து உடல் மெலிந்து எனது பாபங்களைப் போசுக்கி நாவெடுத்து அருள்வள்ளலை அழைப்பதற்கு நான் உரியவளானபிறகு உனக்காகவும், அலான்ஸோ உனதுகோராவிற்காகவும், உன்குழந்தைக்காகவும்—இராஜசிரேஷ்ட, உனக்காகவும், நீயரசாளும் பிரஜைகளுக்காகவும், நான் கடவுளுக்குப் பூசனைகள் புரிந்துகொண்டிருப்பேன். வல்வெர்தே, நீ என்னுயிரைக் காப்பாற்றினய், அன்பும் அருளும் இன்னதென்று தெரிந்து நட—துன்மார்க்கம் விட்டு நற்கதியைப் பெறு—ஸ்பானியர்களே, உங்கள் நாடு மீண்டு, மகிமையும் அதிகாரமும் பெறச் சென்றதில் நீங்கள் முற்றிலும் வழிதப்பிவிட்டீர்க ளென்பதை உங்கள் சக்ரவர்த்தியிடம் சொல்லுங்கள். மண் பொன் பெண்ணுசைகளாகிய கானல் நீரைப் பின்பற்றிச் சென்ற மனிதனெவனும் சுகப்பட்டதில்லை. அவர்கள் தேசமும் மேன்மை பெற்றதில்லை. இதை அவர்களுக்குச் சொல்லுங்கள்.

[பிஸாரோவின் சவத்தைக் கடைசியாக வியாகுலத்துடன் பார்த்துவிட்டுப் போய்விடுகின்ருள். எக்காளம் ஊதுகிறது. வல்வெர்தே முதலானேர் பிஸாரோவின் பிணத்தைத் தூக்கிச் செல்கின்ருர்.]

**அலான்ஸோ**—அத்தாலிபா! நமது ரோலாவின் நினைவு நிலைக்கும்பொருட்டுச் செய்யவேண்டியவைகளைச் செய்துவிட்டே, நம் சைனியத்தின் வெற்றி விழாவிற்கு நாம் இடம்கொடுக்கவேண்டும்.

[எல்லாரும் விசனத்துடன்வந்து நிற்கின்ருர். போர்ச்சேவகர்கள் முன்னல் வரிசைவரிசையாய் வர, பின்னல் நான்குபேர் ரோலாவைத் தூக்கிவந்து வைக்கின்ருர்கள். குருக்கள் வெகு உருக்கமாய் ஜபம் பண்ணுகின்ருர்கள். அலான்ஸோவும், கோராவும் சவத்திற் கிருபுறமும் முழங்கால் படியிட்டு அடங்காத் துக்கத்துடன் ரோலாவின் கையை எடுத்துத் தம் கண்களில் ஒற்றிக்கொள்ளவும் திரை மெள்ள விழுகின்றது.]

**பிஸாரோ நாடகம் முற்றிற்று.**

---

* தன் கட்டளைப்படி எல்விரா இதற்கு முன்னரே உயிர் துறந்திருக்கவேண்டுமாகையால் தோன்றியது அவளது ஆவியாய்த்தானிருக்கவேண்டுமென எண்ணிக்கலங்கியபிஸாரோ செயலற்றுப் போயினன். மேலும் பிஸாரோ முதல்முதல் அவளைப் பார்த்தபோது அவள் அணிந்திருந்த அதேகன்னிமாட உடையைத் தரித்துத் திடீரெனத் தோன்றின் எல்விராவை அவன் அசதியில் கண்ணுற்றதும் அவன் மனதில் பழைய எண்ணங்களெல்லாம் தோன்றி யவனைத் திகைக்கவுஞ் செய்திருக்கலாம்.



# யாப்பிலக்கணம்

## தொடை—மோனை, எதுகை.

[376-வது பக்கத் தொடர்ச்சி]

செய்யுள்களில் மோனையும் எதுகையும் அமைத்தே பாடவேண்டும் என்பது மரபாயிருக்கின்றது. இது தக்கதே. பொருளின் பெருமையை, இம்மோனை எதுகை அனைய தொடைகள் நயமுற நடத்துதற்குதவுகின்றன என்பதற்கு ஐயமில்லை. செய்யுளின் பொருளைத் தொடர்ந்து நாம் சோராமல் கவனத்தை வைப்பதற்கு இத்தொடைகள் உயரிய கவிகளால் செவ்விதின் கையாளப்பெறுகின்றன. மோனையும் எதுகையும், செய்யுளின் பொருளிற்குரிய முக்கியமான சொற்களில் அமைந்திருப்பதே அக்கவியின் உயர்விற்கு அடையாளம். உதாரணமாக,

> எந்தைநல் கூர்ந்தா னிரப்பார்க்கீந் தேன்றவன்
> மைந்தர்தம் மீகை மறப்பரோ—பைந்தொடி
> நின்று பயனுதவி நில்லா வரம்பையின்கீழ்க்
> கன்று முதவுங் கனி.

என்னுஞ் செய்யுளை நோக்குவீர்களாயின், கருத்தை நிறுவுதற்கு இன்றியமையாச் சொற்களே மோனைக்கும் எதுகைக்கும் இடமாயிருப்பதைக் காண்பது அரியதன்று. இப்படியே,

> ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
> றூற்றுப் பெருக்கா லுலகூட்டும்—ஏற்றவர்க்கு
> நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ராலும்
> இல்லையென மாட்டா ரிசைந்து,

என்னுஞ்செய்யுளிலும் மோனைக்கும் எதுகைக்கு மிடமான சொற்களனைத்தும் பொருளை நிறுவுதற்கேற்ற அவசியம் உடையவைகளாய் இருப்பது காண்க.

> வீமன் மடந்தை விழிமுடியக் கண்டறியா
> வாம நெடுந்தோள் வறியோருக்—கேமங்
> கோடாதா ரகம்போற் குறுகிற்றே மெய்ம்மை
> விடாதான் திருமேனி வேந்து

என்னுமிந் நளவெண்பாச் செய்யுளிலும் அவ்வுண்மையைக் காணலாம். இவ்வண்ணம் மோனை எதுகைகளை முக்கியமான சொற்களிலேயே அமைக்கின்ற திறமை மிகவும் வாய்ந்தவர் கம்பர்.

> தூதுவ னொருவன் றன்னை யிவ்வழி விரைவிற் றூண்டி
> மாதினைவிடுதி யோவென் றுணர்த்தவே மறக்குமாகிற்
> காதுதல் கடனென் றுள்ளங் கருதிய தறனு மஃதே
> நீதியு மஃதேயென்றான் கருணையி னிலைய மன்னன்.

[இராவணன்பால் அங்கதனைத் தூது அனுப்புவதற்கு இராமன் கருதினன் என்பது]

இதனிலுள்ள எதுகை மோனைச் சொற்களை மாத்திரம் தொடுத்தாலும் பொருள் கூடுகின்ற பெருமை

காணலாம்—தூதுவனைத் தூண்டி, மாதினை மறக்குமாகில், காதுதல் கடன், நீதியம்......நிலையும் அன்னான்.

அறநி ரம்பிய வருளுடை யருந்தவர்க் கேனும்
பெறல ருந்திருப் பெற்றபின் சிந்தனை பிறிதா
மறநி னைந்துமை வலிகில ராயினு மனத்தா
லிறனு றும்படி யியற்றுவ ரிடையறு வின்னல்

இந்தச் செய்யுளில், மோனைக்கும் எதுகைக்கும் இடமாகிய சொற்கள் சேர்ந்து அதன் பொருளை எவ்வளவு சிறக்கச்செய்கின்றதென்பதை ஊன்றி உணர வேண்டும்.

ஒன்றிரண்டு பாடுவதாயின் இப்படி மோனையையும் எதுகையையும் ஆய்ந்து ஆய்ந்து அமைக்க இயலுமெனினும் ஆயிரக்கணக்கில் பாடும்போது அத்தனைச் செய்யுள்களும் இத்தகையதிருத்தமுடன் அமைவதென்பது அருமையே. ஆயினும் மோனைக்கென்றும் எதுகைக்கென்றும் வீணான அசைச்சொற்களையும் அடைமொழிகளையும் வருவிக்காமல் காக்கின்ற திறமையால் கம்பர் அனைய கவிகளின்பெருமை சிறக்கின்றது. கூடியவரையில் பொருட் குறிப்புடைய சொற்களிற்றானே மோனையும் எதுகையும் அமைந்திருக்கும் மேன்மையை அவர் பாசுரங்களிற் காண்பீர். அப்படி, பொருளின்போக்கிற் கவை அச்சாணி போன்றில்லாக் காலையிலும், சுவையற்ற அசைச்சொற்க ளாகா. சீவகசிந்தாமணி இயற்றிய திருத்தக்கதேவர் போன்றவர்களுங் கூட 'அந்தில்' முதலிய அசைச் சொற்களை எதுகையின்பொருட்டு உதவிக்கழைத்துக்கொண்டு,

சந்தனக் களியும் பூவுந்
தமனியக் குடத்துள் நீரும்
கெந்தநா றகிலு முத்துங்
கிளரொளி விளக்கு மேந்தி
அந்தில்விற் பயிற்றுந் தானம்
வழிபட வாங்குச் சென்றாள்
மந்திர மடந்தை யன்னாள்
வசுந்தரி வந்து சொன்னாள்.

எனப் பாடுவார். இதனில், அந்தில் என்பது எதுகைக்காக வந்ததுமன்றி, அவ்வடியில் அதற்கு மோனையாக 'ஆங்கு' என்ற சொல்லும் வரவேண்டியதாயிற்று. [சீவகசிந்தாமணி 1797-வது செய்யுளிலும் இன்னுஞ் சில செய்யுள்களிலும் 'அந்தில்' என்ற அசைச்சொல் எதுகையின்பொருட்டு வந்திருக்கக் காணலாம்].

எல்லாக் கவிகளிடத்தும் ஓரோவழி அருகி இவ்வண்ணம் மோனைக்கும் எதுகைக்கும் வீண்சொற்கள் வருவதுண்டெனினும் கீழ்தரக் கவிகளில் இந்தவழக்கம்மிகுந்திருக்கும். குறுக்கல் நீட்டல் வலித்தல்மெலித்தல் விரித்தல் முதலிய விகாரங்களின் உதவியின்றி இவர் நான்கு கவிகள் சேர்ந்துபாட இயலாமல் இடர்படுவர். எனினும் கம்பருங்கூட ஏதோ வொவ்வோரிடத்தில் இவ்விகாரங்களின் உதவியை நாடாமல் தீரவில்லை.

ஞானியு முய்கலா னென்னுதே நாயகனைக்
கானியு மென்றுரைத்த கைகேசி யுங்கொடிய
கூனியு மல்லாற் கொடியார் பிறருளரோ
மேனியு மின்றி வெறுநீரே யாயினர்.

(அயோத்தியாகாண்டம், நகர்நீங்கு. 103.)

இதனில், கூனியும் மேனியும் என்று இருக்க வேண்டுவன கானியும் என்பதற்கு எதுகையாதல் வேண்டி, கூனீயும் மேனீயும் என நீண்டன.

கம்பர், இரணியன் வதைப்படலத்தில்,

ஒரு மோனரா யணுயவென் றுரைத்துள முருகி,

என்னுமடியில், சீரின் அமைப்பிற்காக, நாராயணன் என்பதை 'நராயணன்' எனக் குறுக்கியதைக் குறித்துக் காளமேகப்புலவர்,

நாரா யணனை நராயணனென் றேகம்பன்
ஓராமற் சொன்ன உறுதியால்—நேராக [பேன்
வார்என்றால் வர்என்பேன் வாள்என்றால் வள்என்
நார்என்றால் நர்என்பேன் நன்.

எனப் பரிகசித்தார் என்னுமொரு கதை வழங்குவதுண்டு. கம்பர் கதியே இப்படியானால் மற்றவர் எப்படித் தப்புவாரோ!

இவ்வாறு ஒன்றிரண்டு விகாரங்கள் நேர்வதால் ஒரு பெருங்காவியத்தின் மாண்பு குறைந்திடாது. புன்கவிகளோ பொருளின்சிறப்பை நினைத்துப் பாடுவதைவிட்டு மோனை எதுகைகளுக்காகவே தாம் பாடுவார்போல் தலைப்படுகின்றனர். பொருள் கெட்டாலும், கெடுவது மாத்திரமன்றி விபரீதமேயாய் முடிந்தாலும், மோனையும் எதுகையும் அமைந்தாற் போதுமென்பது அவர் கருத்து. காளிதாசன் இயற்றிய 'மேக சந்தேசம்' என்னும் நூலைத் தமிழில் அகவற்பாவில் மொழிபெயர்த்த தற்காலத்தவர் ஒருவர்,

நிறமென் றெண்ணி மயங்கி நிற்க
மறலியும் நயக்கும் மங்கையர் பலரும்

என வரைகின்றார். இதனில், முன்னடியிலுள்ள றகரத்திற்கு எதுகை பின்னடியிலும் றகரம் வரவேண்டி யிருக்கின்றது. இனி மங்கையர் என்னுஞ் சீரின் முதலிலுள்ள மகாம் மோனையாகும்படி அவ்வடியின் முதலில் மகரத்தை வைத்தார். இதனால், அவ்வடியின் முதற்சொல் மறலி யாயிற்று. (மறலி - எமன்). மன்மதனும் விரும்பத்தகுந்த அழகுடைய மங்கை, என்பதன் சிறப்பை ஒருவாறு உணரலாம். மற்று, எமனும் ஆசைப்படுவதற்குரிய பெண், என்றால் எவர்தான் பொறுப்பார். இந்நூலிற்கு நாம் முன் மதிப்புரை எழுதியபோது (1-வது, வால்யூம், 315-வது பக்கம்) இயம்பியபடி, "எதுகையே மோனையையுந் துணைகொண்டு மங்கையை இழுத்துப்போய் மறலியின்பால் விட்டுவிட்டது". இனி, "மோனை எதுகைகளின் வாய்ப்பட்டு நசுங்குகின்ற புன்கவிகளின் செப்தியை, எமது நண்பர் ஸ்ரீமான் T. N. சேஷசல ஐயர் வரைந்துள்ள 'ஏமாங்கதத்திளவரசன்' என்னும் நாவலின்கண் வரும், இலக்கண சிகாமணி இலக்கியமகாகவி சாபாலப் புலவன் என்னும் பாத்திரத்தினிடத்தின் நன்கு காணலாம். அப்புலவன் பாடிய காக்கைப்புராணத்தின் அவையடக்கமாக,

கோபால னென்றொரு கோமக னிரை காத்தான்
பூபா லர்களும் புவிதனைப் புரந்திடு வார்கள்
மாபால மொன்றினை மரத்தினி லிட்டதே யென்னச்
சாபா லனுமொரு கட்டுரை சாற்றுவ தெவனோ

என்றோர் செய்யுள் காட்டப்பெற்றிருக்கின்றது. இதனில், சாபாலன் என்று ஈற்றடியில் வருதற்குஎதுகையாகவே, கோபாலனும் பூபாலரும் மாபாலமும்



முன்னே நிற்பதல்லால் அவைகளுக்கு வேறோர்பொருளில்லை. மரத்தினால் பெரிய பாலம் இடுவதேபோலத்தான் இக்கவி பாடியதிலடங்கிய அடக்கம் யாதென்பது கடவுளக்கே வெளிச்சம் 'நாயெனக் காகமும் நகைத்த தன்றே' என்றோர் அடி அப்புராணத்தில் வருகின்றதாம். நகரமோனைக்காகவே, காகஞ் சிரித்ததற்கு நாய் உவமையாயிற்று. காகஞ்சிரித்ததாலே மிக அழகு; அதுவும் மோனையின் பொருட்டு அக் காகம் நாயைப்போலுஞ் சிரித்துவிட்டால் யார்தான் சகிப்பார். இன்னு மிப்புவன் கடாரதேசத்துக் காக்கையை வர்ணிப்பதாக,

ஐந்துநீள் விரல தழகிய மூக்கது
பொந்தினிற் புழுவை விழுங்கிடு வாயது
நந்தலில் குணத்து நங்கையே நான்முகன்
தந்ததிக் கடாரந் தாவிய காக்கையே

என்றோர் பாசுரம் பாடியுளன். காக்கைக்கு நான்கு விரல்களே இருக்க, 'ஐந்துநீள் விரலது' என்று பாடினது ஏனென்றாலோ, 'எதுகைஇன்பம் நோக்கி ஒரு விரல் விரிந்தது' என்பான். விரித்தல் என்பது செய்யுள் விகாரங்களில் ஒன்றாகையால், எழுத்துக்கள் விரிவது கிடக்க, இப்புலவன்செய்யுளில், எதுகைக்காகக் காக்கைக்கு ஒருவிரலே அதிகமாக விரிந்துவிட்டது. இவையெலாம் நகைவரும்படி மிகைபடக் கூறியன. எனினும்இந்தப்படி விகாரச்செய்யுளால் புராணங்கள் பாடுகின்ற புலவர்கள் சிலர் இல்லாமற் போகவில்லை.

இப்படி மோனை எதுகைகளில் இடறிவிழுந்து அழிவார் கிடக்கத் தற்காலத்தவர்களில் ஒரு சிலர், இந்தக்கட்டுப்பாடெல்லாம் இருப்பதால் தம்முடைய கருத்தை இஷ்டப்படி பாடுவதற்கு இயலாமற் போய்விடுகின்றதென்றும், ஆகையால் வாயில் வந்தபடி பாடுவதே விடுதலையடைந்ததாகுமென்றும் விளம்பிச் சுதந்திர மடைந்ததற் கடையாளமாகப் பொருளும் சுவையுமற்ற சொற்களை ஓசைநயமுமின்றித் தொடுத்துப் பாடல்களெனப் பகர்ந்துவிடுகின்றனர். நல்ல இலக்கியங்களைக் கற்றுணர்ந்துகொள்வதற்கு வேண்டிய பயிற்சியுள் முயலாதார் இவைகளைப் பாடல்களெனப் பாராட்டுவதும் உண்டு. இதுவும் வருந்தத்தக்கதே. நிபந்தனையைக் கடந்துவிட்டேன் என்பது எளிது; அந்நிபந்தனைக்கு அடங்கி, சொல்லும் பொருளும் சிறக்கப் பாடுவதுதான் திறமையின் அருமை. திருவள்ளுவர், மோனை எதுகை முரண் (முரண் தொடை யாதென்பதைப் பின்னர் விளக்குவோம்) என்னுமித் தொடைகளில் ஒவ்வொன்றேனும் அமைக்காமற் பாடவில்லை. பெரும்பாலும் எல்லாக் குறள்களிலும் இவைகளில் இரண்டேனும் இருக்கும்படியே பாடினர் என இயம்பலாம். ஆயினும், குறட்பாவிலுள்ள இரண்டடியிலும் இத்தொடைகள் அமையவேண்டும் என்னும் நியதி அவர் வைத்துக்கொள்ளவில்லை—(அவர்காலத்தில் அம்மரபுஇருந்ததுமில்லை)—ஒருஅடியிலேனும் இருந்தாற்போதுமெனக் கருதினர். —(இவைகளை நாம் பின்னர் வெண்பாவின் இலக்கணம் உரைக்கும்போது விளக்குவோம்) —எனினும் அடிதோறும் இத்தொடைகள் அமைந்த குறள்களே சிறந்திருக்கின்றன. உதாரணமாக,

அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு

[மேன்மேல் விஷயங்களை அ[illegible] அறியாமையைத் தெரிந்[illegible] போன்ற, இத்தச் சேம்[illegible]மையான ஆபரணங்களை அணிந்தவளுடன் நெருங்கிப்பழகப் பழக முன்னனுபவித்த காமவின்பமெல்லாம் இன்பமேஅன்றென்னும்படி மேன்மேல் மிகுகின்றது—எனப்புணர்ந்து மகிழ்ந்த ஒரு தலைமகன் தன் ஆராமையைப் பாராட்டினான்]:

188918

என்னுங் குறளில், மோனையும் எதுகையும் மூன்றும் அமைந்து அதனழகை அதிகமாக்குகின்றன.

சற்றேறக்குறைய இதே கருத்துடையது,

நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

[நற்குண முடையவர்களுடன் செய்த நட்பானது, கற்கக்கற்க நூலின் நயமுணர்ந்த இன்பம் மேன்மேல் விளைவதுபோல், நாளுக்கு நாள் அதிகமான இன்பத்தை உண்டாக்கும்]

என்னுங் குறள். இதனில், நவிறொறு—பயிறொரு, என முதலடியில் எதுகைமாத்திரம் வந்திருக்கின்றது. [அதுவும் (ய-வ) இன வெதுகை. (ஒரே அடியினுள்ளும் எதுகைத் தொடை அமையலாம் என்பதைப் பிறகு கற்பீர்)]. இரண்டாவது அடியில் ஒரு தொடையுமில்லை. ஆதலால், இது பொருள் நயத்திற் குறைந்ததில்லை யாயினும் முன்காட்டிய குறளவ்வளவு சிறப்புடன் ஓதுவோர் மனத்திற் செறிந்திடாது. இனி

வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பினா ளோள்.

[பூமாலையணிந்த கூந்தலையுடைய இவளது தோள்கள்—நான் எவ்வெவைகளை விரும்பினாலும் அவ்வவைகளே அப்போதே எய்தியதுபோன்ற இன்பத்தை அளிக்கின்றன—எனப்புணர்ந்து மகிழ்ந்தான் ஒரு காதலன்]

என்னுங் குறளும் முன்னுரைத்த குறள்களின் கருத்தை ஒருவாறு ஒக்குமெனினும், முதலடியில் நேரான மோனையின்மையால், படிப்போர் மனத்திற் பதியுந் தன்மை அந்தக் குறள்களைக் காட்டிலும் குறைந்திருக்கின்றது என்னல்வேண்டும்.

குறிப்பு:—இதனில், தோடு+ஆர்=தோடார், எனப் புணரவேண்டியது, எதுகைக்காகத் தோட்டார் என, டகர மெய் விரிந்தது.

தமிழ்ப் பாசுரங்களின் இனிமையோடு பயின்று அநுபவிக்க நினைப்பவர், மோனை எதுகை முதலிய தொடைகளின் இலக்கணத்தைக் கற்றிருக்கவேண்டுமென்பது அவசியம். அப்பொழுதுதான் இவைகள் இறக்குங் கடமைக்குட்பட்டுச் செய்யுளமைப்போர் திறத்தினைக் கண்டு வியந்து இன்புறக்கூடும். அதுவுமன்றிச் செய்யுள்களுக்குப் பொருள்செய்வதிலும் இவ்விலக்கணம் பெரிது உதவும். இது எப்படி என்பது இரண்டொரு உதாரணங்களால் விளங்கும்.

கொடுத்த மைந்தரைக் கொண்டு சிந்தைமுன்
தெடுத்த சீற்றம்விட் டினிது வாழ்த்திமேல்
அடுத்த வேள்விபோய் முடித்து நாமெனா
நடத்தன் மேயினா னவைக்க ணீங்கினான்.

[தயரதன் கொடுத்த இராமஇலக்குமணர்களை அழைத்துக்கொண்டு விசுவாமித்திரன் புறப்பட்டான், என்பது.]

இதனில், நான்காமடியிலுள்ள சொற்களை, நடத்தல் மேயினான் நவைக்கண் நீங்கினான்—என்றும் பிரிக்கலாம் அல்லது......அவைக்கண் நீங்கினான் என்றும் பிரிக்கலாம். அவைக்கண் நீங்கினான் எனப் பிரித்தால், வேள்வியை முடிப்போமென்று நடப்பவனாகிச் சபையைவிட்டுப் புறப்பட்டான், எனப்பொருள்[illegible] அப்பொழுது 'மேயினான்' என்பது முற்றெச்

சமும், 'நீங்கினன்' என்பது வினைமுற்றும்ஆக நின்று செய்யுளிற்கு எழுவாய் இல்லாமற் போகின்றது— விசுவாமித்திரன் என்பதை வருவித்துக்கொள்ள வேண்டும். அவைக்கண், எனப் பிரிப்பதால் அவ்வடியில் மோனையில்லாமையால் இவ்வளவும் நேர்ந்ததென்னலாம். இவ்வாறன்றி, நவைக்கண் நீங்கினன் எனப் பிரித்தவுடன் மோனை அமைகின்றது. மோனை அமையும்படி பிரித்தவுடன் பொருளும் செம்மையடைகின்றது; இப்பொழுது, வேள்வியை முடிப்போமென்று, குற்றத்தினின்று நீங்கினவனுகிய அம்முனிவன், நடக்கலாயினன், எனப்பொருள்படும். நீங்கினன் என்பது வினையாலணையும்பெயராகி எழுவாயாய் நின்று, மேயினன் என்னும் வினைமுற்றை நேரே கொண்டு முடியும். ஒரு அடியில் வேறு மோனையில்லையாயின், இருவிதமாகப் பிரிக்கக்கூடிய சொல்லை, மோனைக்கு இணங்கும்படி பிரிக்கவேண்டுமென்பது உரைசெய்வதற் குரியதோர் விதியெனக் கூறலாம். இனி வேறொரு மோனை இருக்குங்காலையிலும், இருவிதமாகப் பிரிக்கக்கூடிய வொன்று பின்னுமொரு மோனை தரும்படி பிரியவல்லதாயின் அவ்வாறு பிரித்தலே கவியின் கருத்திற்கு நெருங்கிய பொருளைத் தரக்கூடியதாக இருக்கும் என நினைக்கின்றோம். இராமனுக்கு முடிசூட்டுவதைப் பற்றித் தயரதன் உசாவுதலும் அவனது அவையின்கண்ணிருந்தவர்,

'அத்த நன்றென வன்பினொ டறிவிப்ப தானார்'

எனக்கூறப்பட்டிருக்கின்றது. மூன்றாஞ்சீரை 'அன்பினொடு' என்றும் பிரிக்கலாம், வன்பினொடு (=வலிமையோடு, கட்டாயப்படுத்தி.) என்றும் பிரிக்கலாம். இவ்விருபொருள்களும் ஒருவாறுபொருந்தும். வேறு மோனைகள் அவ்வடியில் இருப்பதால், 'அன்பினொடு' என்றுதான் பிரிக்கவேண்டும் என்ற அவசியமில்லை. ஆயினும், 'அன்பினொடு' எனப் பிரித்தால்தான் அதுவும் ஒரு மோனையாய்ச் சேருமாகையால், 'அன்போடு கூறினார்' என்பதே கம்பர் கருத்தெனக் கொள்ள வேண்டும்.

இதுவுமன்றி, சிற்சிலபோது மோனையைப்பற்றியே சொல்லின் உருவம் யாதெனத் தெரிந்துகொள்ளக் கூடியதாகும். உதாரணமாக,

குறவர்கா னவரே மள்ளர் குன்றவர் புனவ ரோடு
மிறவுளர் குறிஞ்சி தன்னி லின்புறு மாக்கள் பேரே

என்பது நிகண்டு. இது குறிஞ்சிநிலமக்களின் பெயர்களைச் சொல்கின்றது. குறவர் கானவர் மள்ளர் குன்றவர் புனவர்—அப்புறம், இறவுளரா அல்லது மிறவுளரா? (புனவரோடும்+இறவுளர், என்றும் பிரியலாம்). இறவுளர், என்பதுதான் பெயர்என்று கொள்ளவேண்டும். ஏனெனில் மிறவுளர் என்பதாயின் அவ்வடியில் மோனை இல்லை—இறவுளர், என்று பிரிந்தாற்றான் 'இன்புறு' என்னுஞ்சீரில் மோனை உடையதாகும்.

இனி, எதுகைகளைப் பயில்வதில் ஒரு மரபு இருக்கின்றது— எதுகையாக வெவ்வேறு அடிகளில் வருகின்ற சொற்கள் வெவ்வேறுயிருக்கவேண்டும். கண்டார், என்பது முதலடியின் முதற்சொல்லாயின், மற்ற அடிகளில் எதுகைகளாக வருவன, பண்டோர், தண்டார், கொண்டோர், என வேறு வேருக இருக்கவேண்டுமே யொழிய, எல்லாம் 'கண்டார்' என்ற சொல்லாகவே இருக்கலாகாது. அப்படி இருக்குமாலுல் அவை வேறுவேறு பொருள்களைத் தந்து நிற்கவேண்டும். ஆதலின், ஒரே சொல் அடிகளின் எதுகையாக நிற்கக்கண்டால், அச்சொற்களுக்கு வேறு வேறு அர்த்தத்தைச் சார்த்திச் செய்யுளின்பொருளைத் தேரத் தலைப்படவேண்டும். உதாரணமாக,

அம்புகை வல்வில் லார்கழன் மள்ளர் திறலேத்த
வம்புகைக் கொண்டா லாரிவர்க் கீண்டு நிகராவா
ரம்புகை யார்ந்த வந்துகி லல்குல் லவிர்கோதா
யம்புகைக் காணு மையனைக் கையிற் றொழுதென்றார்

[சீவகசிந்தாமணி—2332]

இதனில், முதலடியின் முதலிலுள்ள, அம்பு, என்பது பகழி என்னும் பொருளுடையது. இரண்டாவது அடியின் முதலில் இருக்குஞ் சொல்லும் 'அம்பு' என்பதுதான்; 'வப்பு' என்பதன்று; 'வம்பு' என்பதாயின் அவ்வடியின்கண் மோனை இலதாகும். [ஏத்த+அம்பு=ஏத்த வ் அம்பு=ஏத்த வம்பு, என வகர உடன்படுமெய் பெற்றுப் புணர்ந்தது (2-வது வால்-769). ஆகையால் இவ்வடியிலுள்ள சொல், வேறு பொருளுடையதாக இருக்கவேண்டுமென்பதை யுணர்ந்து ஆராயுங்கால், அம்பு என்பதற்கு இங்கு 'உலகம்' என்னும் பொருள் அமையும். மூன்றாவதடியிலும் (ரகரம் தமிழில் மொழிமுதல் வாராதாகையாலும், ஆவார்+அம்புகை = ஆவாரம்புகை, என்று புணர்ந்திருப்பதாலும்) முதலில் இருப்பது, 'அம்புகை' என்பதே; இதனை அம்+புகை எனக் கொண்டு, அழகிய புகை என்னும் பொருளைப் பெறவேண்டும் — (மூன்றாமடியின் எல்லாச் சீரிலும் மோனையிருப்பதால் முற்றுமோனை.) இனி, நான்காம் அடியின் முதலில் இருப்பதும், 'அம்பு' என்பதுதான், இதற்கு இங்கு 'வளையல்' என்பது பொருள். வெற்றியொடு இராசமாபுரம் மீண்டு அரியாசனம் ஏறிய சீவகனைக் கண்ட மாதர் காமுற்றுத் தம்முள் சொல்லிக்கொண்ட இச்செய்யுளின் பொருள் வருமாறு:—

[அழகிய வாசனைப்புகை யூட்டிய துகிலாடைக்குள் அல்குல் பூரித்து விளங்குகின்ற மாதே, அம்பைச் செலுத்துகின்ற வலியவில்லையும் கட்டிய வீரக்கழலையும் உடைய போர் வீரர்கள் இவனது திறமையைத் துதிக்கும்படி, உலகத்தைத் தன்கைக் கொண்டான் என்றால், இவனுக்கு இங்கு நிகராவர் ஆர்! இவனை யாம் கையெடுத்துத் தொழுதவுடன் (காமத்தால் மெலிந்த கைகளினின்று கழன்று வீழ்ந்ததால்) எம்கைகளில் இருந்த வளையல்களைக் காணுமல் திகைக்கின்றோம் என்பார் சிலமாதர்].

இனி, எஞ்சியிருக்கின்ற, முரண்தொடை இயைபுத்தொடை, அளபெடைத்தொடைகளைப் பற்றி அடுத்தவாரங் கூறுவோம்.



# மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாத ஐயர்

கும்ப கோணமாங் கோதின் மாநகர்
நம்ப னையொளிர் ஞான மூர்த்தியை
அம்பை தன்னொடு மமர்ந்த செல்வனை
உம்பர் வாழ்வினை யுவந்து போற்றியே.

சொல்லுவேன் யானோ முந்துஞ்
சொற்றிற முடையான் றன்னை
எல்வினை விளைவித் தோங்கி
மிளிர்கின்ற கதிர்போல் வானை
அல்லன மனத்தில் மாசை
யகற்றியே யாள்கின் றானைப்
புல்லொடு மரனும் போற்றிப்
புகழ்சாமி நாதக் கோவை.

மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதஐயர் அவர்கள் இச் சோழநாட்டில் அவதரித்திருக்கின்ற ஒரு சிறந்த தமிழ் வித்துவான். அவர் கும்பகோணத்துக்கு மேற்கே 10 மைல் தூரத்திலுள்ள உத்தமதானபுரம் என்ற ஒரு சிறிய கிராமத்தைச்சேர்ந்தவர். ஐயரின் தகப்பனுர் ஸ்ரீ வேங்கடசுப்பய்யர் என்ற திருநாமம் பூண்டவர். அவர் ஒரு பெரிய சிவபக்தர். அவரைப் பற்றி மகா மகோபாத்தியாய ஐயர் அவர்களே,

மெய்யார நீறணிந்து விழிமணி மாலிகை பூண்டு
கய்யார மலரேந்திக் கசிந்துருகித் தினந்தோறும்
மய்யாரு மணிமிடற்று மாதேவை யருச்சிக்கும்
அய்யா * * * *"

என ஒரு சமயம் சொன்னதுண்டாகையால் அவர் ஒரு பெரிய சிவபக்தர் என்பதிற் சந்தேகமில்லை. ஐயரின் தந்தையாருக்கு அந்நாளில் நமது ஐயரை ஆங்கிலம் படிக்கவைக்கவேண்டு மென்ற யோசனை உண்டாகவில்லை. ஸ்ரீ வேங்கடசுப்பையருக்குத் தமதுபிள்ளை சாமிநாதனைச் சங்கீதங் கற்கும்படி செய்யவேண்டுமென்ற ஆசையிருந்ததாய்ச்சொல்லப்படுவதுண்டு ஏனெனில் சங்கீதத்தில் நல்ல தேர்ச்சி அத் தந்தையாருக் குண்டு. அது,

"அத்தா நினது பிரிவல்லற் கடலழுத்தப்
பித்தாக்கி யென்னைப் பெரிதும் வருத்தினையால்
எத்தானஞ் சென்று யிதுவோநின் தண்ணளியே
சத்தான யின்பமொரு சங்கீத சாகரமே"

—என்று ஐயர் சொல்லியிருக்கும் பாடலாலே வெளியாகின்றது.

ஆனல், தமிழ்ப்பாஷையும் பழைய தமிழ்நூல்களும் செய்திருந்த நல்ல அதிட்டத்தால் ஸ்ரீ வேங்கடசுப்பய்யர் தமது குமாரரைத் தமிழ்வாசிக்கும்படி செய்வதாய்த் தீர்மானித்து ஐயரைத் தமிழ்கற்கத் திருவாவடுதுறை மடத்திற் கொண்டுபோய்ச் சேர்த்தார். தமது தகப்பனுர் தன் விஷயமாய் அக்காலத்தில் செய்த அவ்வேற்பாட்டினை ஐயர் பிற்காலத்தில் மிகுதியும் பாராட்டியுள்ளது பின்வரும் பாடலால் விளங்கும்:—

பற்றிலெங்கே செந்தமிழைப் பற்றிக்கற்றோர் பலர்பால்
[illegible] மீனுட்சி சுந்தரநல் லாரியன்பாற்
[illegible] கற்றுக்கவ லையோரீஇ அவ்வழியே
[illegible] பேறுன்செய் யாவிடினே"

திருவாவடுதுறை [illegible] கும்பகோணத்தருகாமையி லுள்ளது. அம்மடத்தில் [illegible]

தமிழ் வாசித்தவர்கள் பலர். அவர்களுள் கியாதி பெற்றோர் சிலர். அன்னருள் நமது ஐயர் விசேஷ கியாதி பெற்றுள்ளார். அவர் வாசிக்கும்போது திருவாவடுதுறை மடத்து வித்துவானுகவும் ஆசிரியராயுமிருந்துவந்தவர் ஸ்ரீ மீனுட்சிசுந்தரம்பிள்ளை யவர்கள். அவர்கீழ் அமர்ந்து தமிழ்பயிலும் பாக்கியத்தைப் பெற்று நமது ஐயர் அப்பாஷையைச் செவ்வனே படித்துக்கொண்டார். ஆகவே அம்மடத்திலேயே ஐயருக்குமுன் படித்தவராகிய கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்போதகர் ஸ்ரீ தியாகராஜ செட்டியார் தாம் அந்தக் காலேஜை விட்டு நீங்கிப் பென்ஷன் பெற்றுக்கொள்ளுஞ் சமயத்தில் தம்முடைய ஸ்தானத்தில் கும்பகோணம் காலேஜ் தமிழ்ப் போதகராய் நம் ஐயர்அவர்களை வைத்துவிட்டுப் போகவேண்டுமென்ற கருத்துக்கொண்டார். அக்கருத்து நிறைவேறுவதற்குப் போதிய வசதியும் அச்சமயம் அமைந்திருந்தது. தமது கருத்தை ஸ்ரீ தியாகராஜ செட்டியார் அப்போது அந்தக் காலேஜ் பிரின்ஸ்பாலாயிருந்தவராய ராய்பகதூர் T. கோபாலராயரிடம் தெரிவிக்க, அதற்கு ராயர்அவர்கள் உடன்பட்டுக் கல்வியிலாகாத்தலைவருக்கு, பென்ஷன்பெறவிருக்கும் ஸ்ரீ தியாகராஜசெட்டியார் ஸ்தானத்துக்கு ஐயர் அவர்களை நியமித்தல் தகுதியுடையதாகுமென்று சிப்பார்சு செய்தார். அந்தச் சிப்பார்சு அங்கீகரிக்கப்பட்டு நமது ஐயர்அவர்கள் அந்தக் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதராய் ஸ்ரீ தியாகராஜ செட்டியாருக்குப் பதிலாய் நியமிக்கப்பட்டார். நமது ஐயர், செட்டியார் அவர்கள் தமக்குச் செய்த பேருதவியை இன்றைக்கும் ஞாபகத்தில்வைத்துப் போற்றி வருகின்றார். சென்னைத் திருவடீச்வரன்பேட்டையில் உள்ள தமது வீட்டுக்குத் தியாகராஜ விலாஸ் என்று பெயரிட்டிருப்பதே இதற்குச் சாட்சியாகும்.

மகா மகோபாத்தியாயா ஐயர் அவர்கள் கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்போதகராக 1880-ம் வருஷத்தில் நியமனம்பெற்று வந்துசேர்ந்தார். அப்போது காலேஜ் வகுப்புகள் ஒன்றில் சொல்லிய முதல் பாடத்தை அவ்வகுப்பு மாணவர்களும், பிரின்ஸிபால் மிஸ்டர் டி. கோபால ராயர் அவர்களும், காலேஜ் போதகர்களில் ஒருவராகிய மிஸ்டர் R. V. சீனிவாச ஐயரும் கேட்டு மட்டற்ற சந்தோஷமடைந்தார்கள். ஐயர் அவர்கள் அப்பாடத்தை நேற்றுத்தான் சொன்னார்கள்போல் தோற்றுகின்றது. 50 வருஷங்கள் கழிந்துவிட்டன. அதுமுதல் இடைவிடாமல் 23-வருஷகாலம் நமது ஐயர் அந்தக் காலேஜிலேயே தமிழ்ப்போதகரா யிருந்து வந்தார். ஆனல் எவ்வளவு காலந்தான் அவர் தமிழ்ப்போதகரா யிருந்துவரும் ஏகதேச உரிமையை அந்தக் கும்பகோணம் ஒன்றே பெற்றிருக்கக் கூடும்?. 1903-ம் வருஷத்தில் அச்சமயம் கல்வி இலாக்காத் தலைவராயிருந்த மிஸ்டர் ஸ்டுவார்ட், ஐயர் அவர்களை அக்காலேஜை விட்டுச் சென்னைராஜதானிக் கலாசாலைக்குத் தமிழ்ப்போதகராய் மாற்றினர். ஏனெனில் மிஸ்டர் ஸ்டுவார்ட் கும்பகோணம் காலேஜ் பிரின்ஸ்பாலாயிருந்த போதே ஐயரின் திறமையை விசேஷமாய் அறிந்துகொண்டவர். அவர் ஐயரைச் சென்னைப் பிரெஸிடென்ஸி

காலேஜில்தமிழ்ப்போதகராய்வைத்துப் பார்க்கவேண்டுமென்ற ஆசை மேலிட்டவரா யிருந்ததுபற்றி அவர் தக்க சமயம் வாய்ப்பதை எதிர்பார்த்துக்கொண்டேயிருந்து 1903-ல் அவரைச் சென்னைப் பிரெஸிடென்ஸி காலேஜுக்கு மாற்றியே தீர்த்தார். ஆகவே அந்தக் காலேஜிலும், பிரெஸிடென்ஸி காலேஜிலுமாக 39 வருஷங்களுக்குக் குறையாமல் ஐயர் வேலைபார்த்தார். ஒருவர் 39 வருஷங்கள் அளவு காலேஜ் போதகரா யிருந்துவருவது சாதாரணமாய் நிகழும் சம்பவமன்று. அவ்விரண்டு காலேஜும், அக்காலேஜ்களின் மாணவர்களும் செய்திருந்த நல்வினையே அவர் அக்காலேஜ்களில் தமிழ்ப்பாடஞ் சொல்ல வந்ததற்குக் காரணமாகும். அவரது தமிழ்த்திறமையையும்தமிழ்ப் பாடஞ் சொல்லுந் திறமையையும் மாணவர்களை மரியாதையாய் நடத்தும் திறமையையும், அன்னாருடைய மரியாதைக்குத் தம்மை உரியராக்கிக்கொள்ளும் அவரது திறமையும் பற்றி நாம் இங்குச் சிறிது பேசுதல் அவசியமாகும். அந்தக்காலத்தில்அந்தக்காலேஜில்ஆங்கிலப் போதகர்களாயிருந்த ராவ்பகதூர் கோபால ராயரும், மிஸ்டர் ஸ்டுவார்ட்டும், மிஸ்டர் பில்டர்பெக்கும், ராவ்பகதூர் சாது சேஷய்யாவும், எவ்வளவு திறமையுடன் ஆங்கிலம் போதிப்பார்களோ அவ்வளவு திறமை தானுங் காட்டித் தமிழ்ப்பாடஞ் சொல்லும் தன்மையுடையராய் ஐயர் அவர்க ளிருந்துவந்தார். அவருடைய தமிழ்வகுப்புக்களில் பிள்ளைகள் ஒழுங்குத்தப்பான செய்கைகளை யொருபொழுதும் செய்ய மாட்டார்கள். சித்திரப்பாவையின் அடங்கியிருந்து பாடங் கேட்பார்கள். அவர் பாடஞ்சொல்லுவதை நிறுத்துகிருரே யென்று சில சமயங்களில் பிள்ளைகள் வருந்துவது முண்டு. அவர் பாடஞ்சொல்லும்போது பிள்ளைகள்,

> "செவிக்குண வில்லாத போழ்து சிறிது
> வயிற்றுக்கு மீயப் படும்"

என்ற ஆன்ருேர் மொழிக்கே இலக்காயிருப்பார்கள். சுருங்கச் சொல்லுமிடத்து அவருடைய மாணாக்கர்கள் தாங்கள் செய்த தவத்தின்பயனுகத் தங்களுக்குக் கிடைத்த தமிழ்த்தெய்வம் என அவரைக் கொண்டாடுவது வழக்கம்.

மகாமகோபாத்தியாயர் அவர்கள் 1919-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் வேலையைவிட்டு நீங்கினுர். ஆனுலும் காலேஜ்களில் தமிழ்ப் பாடஞ் சொல்லும் வேலை அதனுேடு அவரைவிட்டு நீங்கவில்லை. அவர் பென்ஷன்பெற்ற சிறிதுகாலத்துக்குள் ஸர் அண்ணுமலை செட்டியார், ஐயர் அவர்களைச் சிதம்பரம் தமிழ்க் காலேஜுக்குப் பிரின்ஸிபாலாய் நியமித்தார். அப்பதவியை ஐயர் அவர்கள் 3 வருஷங்கள் வகித்துவிட்டுச் சுகஜீவியாய் இனியேனும் சிறிதுகாலம் இருப்போம் என்று சென்னைக்குத் திரும்பினுர்.

மகாமகோபாத்தியாயர் அவர்கள் அந்தக் காலேஜுக்கு வந்தபோதே பழைய தமிழ்நூல்களின் ஆராய்ச்சிக்கு முகூர்த்தம் கொள்ளப்பட்டுப் போனதாய் நாம் சொல்லக்கூடும். ஏனெனில் அந்தக் காலேஜ் தமிழ்ப் போதகரா யிருந்துகொண்டே தமிழ்ப்பெருங்காப்பியங்களாகிய சீவகசிந்தாமணி சிலப்பதிகாரம் மணிமேகலை இவைகளை ஆராய்ச்சிசெய்து ஏட்டுப்பிரதிகளிலிருந்து எடுத்து அச்சிடுவிக்க நமது ஐயர் தொடங்கினுர். முதலில் அவர் சிந்தாமணியை அச்சிட்டு வெளியிடுவதை மேற்கொண்டார். அதனை அச்சிட்டு வெளியிட அவர்பட்ட சிரமம் சொல்லுந்திறமன்று. உள்ளபடியே ஏட்டுப்பிரதிகளை வைத்துக்கொண்டு பழைய நூலொன்றைச் சோதித்துப் பெயர்த்தெழுதிப் போதிய குறிப்புகளுடன் அச்சிடுவிக்கும் சிரமம் பெரிதாகும். அப்படியிருக்க ஐயர் மேற்கொண்ட முயற்சி ஒழுங்காய்ப் பூர்த்திபெருவண்ணம் அறிந்தோ அறியாமலோ இடையே தடையாய் நின்றவர்கள் சிலருண்டு. அப்படித் தடையாய் நின்றவர்கள் ஐயருடைய பெருமுயற்சியாகிய பெருங்காற்றில் பஞ்சாய்ப் பறந்துபோயினர். சீவகசிந்தாமணியும் உச்சிமேற் புலவர்கள் வைக்கும் நச்சினுர்க்கினியருரையுடன் ஐயரால் பரிசோதிக்கப்பட்டபடி அச்சாய் வெளிவந்தது.

ஏட்டுப்பிரதிகளில் சிதைந்தும், உருமாறியும் அடிகளே மாற்றப்பட்டும் கிடக்கும் பாடல்களை ஒத்துப்பார்த்து ஆக்கியோன் பாடல் இம்மாதிரிதானிருக்கவேண்டுமென்று நிச்சயித்துப் பெயர்த்தெடுத்தெழுதுவதிலும், அப்பாடல்களை வரிசைப்படுத்துவதிலும், படலங்களாகப் பிரிப்பதிலும் மேற்கோள்கள் இன்ன நூல்களிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றனவென்று கண்டுபிடிப்பதிலும் உள்ள கஷ்டம் சாமானியமான தன்று. பழைய நூல் ஆராய்ச்சியில் பழகியவர்களுக்கே அக்கஷ்டம் இத்தன்மையதாகுமெனத் தெரியவரும்.

மேற்சொன்ன கஷ்டங்கள் எல்லாவற்றையும் அநுபவித்துக்கொண்டு சிந்தாமணியை அச்சிற் பதித்த ஐயரை ஒரு சமயம் ஒரு பூரியன் வீணுக் கிழித்துப் பேசுவானுயினுன். அப்போது ஐயர் தமக்குண்டான மனவேதனையை சகிக்கமாட்டாதவராய்ச் சுவாமிமலையில் (திருவேரகத்தில்) திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் முருகக்கடவுளைத் தியானத்துப் பின்வரும் பாடலைச் சொன்னுர்:—

> " மலர்கொண் டுனையே வழிபட் டொருவேன்
> அலர்கொண் டுவிளங் கலைவா விகள்சூழ்
> கலர்கண் டறியாக் கவினே ரகவேள்
> பலர்கண் டிகலும் படிவைத் தனையே "

ஆயினும் அக்காலத்தில் ஐயர் அவர்களுக்கு எதற்கும் அஞ்சவேண்டாமென்று தைரியஞ்சொல்ல அவருடைய தகப்பனுர் ஸ்ரீ வேங்கடசுப்பய்யர் இருந்தார். அதுபற்றியே நமது ஐயர் அத்தகப்பனிறந்தகாலத்தில் சொல்லிய பாடல்களில் பின்னே குறிப்பிடப்பட்டிருக்கும் பாடலைச்சொல்லி இனி "யெனக்கு எதற்கும் அஞ்சாதேயென்று தைரியஞ்சொல்ல யார் இருக்கிருர்க" ளென்று பொருள்படும்படி துக்கித்தார்.

> அன்போடு சிவபூசை யாற்றுமிடத் தோடும்நீ
> இன்போடு பாடியிருக்கு மிடமுந் தமியேன்
> துன்போடும்படிவார்த்தைசொல்லுமிடந்தானுமந்தோ
> என்போடு முள்ளுருக வென்னை வருத்துறுமால்"

அந்நாளில் அவரது தகப்பனையன்றி ஐயருக்குத் தைரியஞ் சொல்ல வேறு சிலரு மிருந்தார்கள். அவர்களுள் காலஞ்சென்றுவிட்ட சேலம் ராமசாமி முதலியார், பூண்டி ரங்கநாத முதலியார் சாது சேஷய்யா முதலான சில பெரியோர்களைக் குறிப்பிடலாம். அவர்கள் எல்லோரும் ஒருவர்பின்னுருவராய்க் காலமாயினர். அது, முதலியாரைப்பற்றி நம் ஐயரவர்கள் சொன்ன அடியிற்கண்ட பாடலால் வெளியாகின்றது



> என்னே நலமார் ராமசாமிக் குரிசில்
> முன்னே நடந்தான் மொழியுமவனைத் தொடர்ந்து
> பின்னே நடந்தாய்ப் பிரிவாற்றுத் தன்மையினுல்
> நன்னேய மார்அரங்க நாத தயாகரனே"

அன்னாருள் பூண்டி அரங்கநாத முதலியாரேனும் ஐயர் சென்னைக்கு வருந்துணையும் அதற்கப்பாலும் உயிரோடிருந்திருப்பாராயின் ஐயருக்குச் சென்னை யூனிவர்சிடியின் ஆதரவு இப்போதிருப்பதைவிட அதிகமா யிருந்திருக்கலாம். ஐயர் அரும்பாடுபட்டு வெளியிட்டிருக்கும் பழையகாலத்துச்சங்கநூல்களைக் கருதி அவருக்கு யூனிவர்ஸிடியார் பொருளுதவி செய்யவேண்டுமென்று வற்புறுத்தியெடுத்துக்காட்டிச் சிறிது பொருளுதவி கிடைக்கும்படியாய் முதலியார் அவர்கள் செய்திருக்கக் கூடும். ஐயர் யூனிவர்ஸிடியாரிடம் அன்னாரது ஆதரவுக் கறிகுறியாய் அதிக பொருளுதவியைப் பெற்றதாய்த் தெரியவில்லையாயினும் அச்சபையாருக்கு ஐயரிடம் விசேஷ நல்மதிப்பில்லாமற் போகவில்லை. சமீபகாலத்தில் அச்சபையார் ஐயரைக்கொண்டு தமிழ்ப்பாஷை சம்பந்தமாய்ச் சில அருமையான உபந்யாசங்கள் செய்வித்தார்கள். இதுமட்டுமேயன்றி இப்போதும் சென்னை யூனிவர்ஸிடியில் ஐயர் அவர்கள் தமிழ் போர்ட் ஆப் ஸ்டடியிலும், லெக்ஸிகன் கமிட்டியிலும் மெம்பராயிருந்தது வருகிருர்.

ஐயர் பிரெஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் போதகரா யிருந்துவந்தபோது அவருக்கு மகாமகோபாத்யாய பட்டஞ் சூட்டப்பட்டது. அது ஐயருக்கு முன் எந்தத் தமிழ்ப்பண்டிதருக்குஞ் சூட்டப்படவில்லை. அப்பட்டத்தைப் பெற்றதில் ஐயர் தமக்குத் தாமே நிகர் ஆவர். இப்போது ஐயரின் சீவியச் சரித்திரச் சுருக்கத்தை முடிக்கப்போகிறேன். அதைமுடிப்பதற்குமுன் நான் சென்னை யூனிவர்ஸிடியாரைவேண்டிக்கொள்வதொன்றுண்டு. அஃது என்னவெனில்அச்சங்கத்தார் ஐயரின் மிகவும்போற்றுதற்குரிய தமிழ்த்தேர்ச்சியைக் கருதி அவருக்கு டாக்டர் ஆப் தமிழ் லிடரேச்சர் (Doctor of Tamil Literature) என்னும் கௌரவப்பட்டத்தை அளிக்கவேண்டுமென்பதே. நேற்றுத்தினந்தான் தோற்றியதென்று சொல்லக்கூடிய ஆந்திரா யூனிவர்ஸிடியார் காலஞ்சென்றுவிட்ட வேதம் வேங்கடராய சாஸ்திரியாருக்கு டாக்டர் ஆப்லெட்டர்ஸ்(Doctor of Letters) என்னும் பட்டம் கொடுத்திருக்கும்போது சென்னை யூனிவர்ஸிடியார் நமது ஐயருக்கு அம்மாதிரிப் பட்டமளிக்கப் பின்வாங்கலாகாது.

---

## கம்பராமாயணம்

### அயோத்தியா காண்டம்— 4. நகர்நீங்கு படலம்.

[374-வது பக்கத் தொடர்ச்சி]

ஏசாப் பெருமைக் கோசலை யிவளே.

**தா**னும் போகாதொழியான் தன்னைஉடன்கொண்டு ஏகவும் ஏகான் இராமன் என்பதுணர்ந்த கோப்பெருந்தேவி, புவனநாதனைத் தொழுது அவனுணையை மாற்ற வெண்ணினளாய்க் கைகேயியின் கோயிலைச் சேர்ந்து அங்கு, மாய்ந்தானென்ன மயங்கிக்கிடந்த மன்னவன்நிலை காண்டலும், உயிருடைந்தவோர் உடலெனத் தரைமிசை விழுந்து, அவன் துயரைத் தேற்றும் மொழிகளால் தன்துயரே தலைசிறக்கப் புலம்பலாயினுள்.

> பிறியார் பிரிவே தென்னும்
> பெரியோய் தகவோ வென்னும்
> நெறியோ வடியே நிலைநீ
> நினையா நினைவே தென்னும்
> வறியோர் தனமே யென்னும்
> தமியேன் வலியே யென்னும்
> அறிவோ வினையோ வென்னும்
> அரசே யரசே யென்னும்

[ஒருபோதும் பிரியாதவர்களை விட்டுப் பிரிவதற்குக் காரணம் யாது என்பாள். பெரியோய் இது உனக்குத் தகுமோ வென்பாள். இது நீதியோ என்பாள். அடியேங்களுடைய நிலையை நீ நினையாதிருப்பதற்குக் காரணம் என்ன என்பாள். வறியவர்களுக்கு வற்ருத தனம்போன்றவனே என்பாள். தனிமையுற்ற எனக்குத் துணைப்பலமாய் இருப்பவனே என்பாள். இது அறிவாகுமா, நீசெய்யத்தகுந்த காரியமாகுமா(அல்லது, அறிவு ஓவினையோ-அறிவு நீங்கினுயோ) என்பாள், அரசே அரசே என்பாள்]

> இருளற் றிடவுற் றொளிரும்
> இரவிக் கெதிருந் திகிரி
> உருளத் தனியுய்த் தொருகோ
> னடையிற் கடைகா ணுலகம்
> பொருளற் றிடமுற் றுறுமப்
> பகலிற் புகுதற் கென்றோ
> அருளக் கருதிற் றிதுவோ
> அரசர்க் கரசே யென்னும்

[இருள் கெடும்படி விளங்கும் சூரியனுக்கு நிகரான உன் ஆக்ஞாசக்கிரம் செல்லும்படி ஒப்பிலாவகையில் செலுத்துகின்ற உன் ஒரு செங்கோலளவில் அடங்குகின்ற இவ்வுலகம், எல்லாப் பொருள்களும் முடிகின்ற பிரளயகாலத்தில் விளையும் அழிவை அடையவேண்டும் என்று எண்ணியோ, அரசர்க்கு அரசே, இது செய்தாய் என்பாள்.

> திரையார் கடல்சூ ழுலகின்
> தவமே திருவின் திருவே
> நிரையார் கலையின் கடலே
> நெறியார் மறையின் னிலையே
> கரையா வயர்வே னெனைநீ
> கருணா லயனே யென்னென்
> றுரையா விதுதா னழகோ
> உலகே ழுடையா யென்னும்

[அலைகளுடைய கடல்சூழ்ந்த உலகின் தவப்பயனே செல்வத்திற்கெல்லாம் செல்வம் போன்றவனே, ஒழுங்காய கல்விக்குக் கடல்போன்றவனே. நெறியுடைய வேதத்திற்கு நிலைக்களம் போன்றவனே. கருணைக்கு இருப்பிடமானவனே. கரைந்து சோர்கின்ற என்னை நீ, ஏனென்று கேட்காதிருக்கும் இது அழகோ—ஏழுலகங்களையும் உடையவனே, என்பாள்]

மின்னின் றனைய மேனி
வெறிதாய் விடநின் றதுபோல்
உன்னுந் தகைமைக் கடையா
வுறுநோ யுறகின் றணரா
னின்னென் றுரையா னென்னே
யிதுதான் யாதென் றறியேன்
மன்னன் றகைமை காண
வாராய் மகனே என்னும்

[மின்னல் தங்கியது போன்ற சரீரம், உயிர்ப்பொலி வழிந்துகெட நின்றதுபோல், நினைப்பதற்கரிய, மிகுந்த நோய் அடைந்து அறிவிழந்து கிடக்கின்றான் (தயரதன்) தனக்கு என்ன நேர்ந்ததென்று உரைக்கின்றிலன். இது என்னவென்று யான் அறிகிலேன்; மகனே இராமா, சக்கிரவர்த்தியின் தன்மையைக் காண்பதற்கு வருவாயாக, என்றாள்]

இது, தகவோ வினையோ அறிவோ என மன்னனை மெல்ல இடித்துரைகின்றாள் கோசலை என்பது வெளிப்படையானாலும், எதுபற்றி இடித்துரைக்கின்றாளென்பது அக்கோசலையின் குணநலப் பெருமைகளை முன்னிட்டு உணவதற்குரியதேயன்றிச் செய்யுளின்கண்ணுள்ள சொற்களைக்கொண்டே தெளிவது எளியதன்று. மூத்த மைந்தனுக்கு முறையாலே அரசளிக்காது இளையோற் கீந்ததை இடித்துரைத்ததன் றிது. அது செய்ய வால்மீகிமுனிவரின் கோசலை இருக்கின்றாள். அந்நூலில், இராமன் நகர்நின்று நீங்கியபின் ஆற்றாத்துயரால் தளர்வுற்ற தயரதன் பாவம், அங்கிருந்த துவாரபாலகர்களை நோக்கி, "இராமனுடைய தாயாகிய கௌசலையின் வீட்டில் என்னை விரைவிற் கொண்டுபோய்ச் சேருங்கள். என் உள்ளத்திற்கு வேறோரிடத்தில் தேறுதல் உண்டாகமாட்டாது" என்று அவள்பால் ஆறுதலடைய நினத்தவனாய் அடைந்து, "இராமனைத் தொடர்ந்துசென்ற என் கண்கள், இப்பொழுது திரும்புகின்றன அல்ல. கௌசலையே, நீ என் கண்களுக்குத் தெரியவில்லை; என்னை உன் கையால் நன்றாகத் தொடு" எனக் கல்லும் புல்லுங் கரைந்துருகும்படி இரங்கிவேண்டலும் அவள் பின்வருமாறு பேசினாள் என்கின்றார் வான்மீகிமுனிவர் :—

"கைகேசியானவள் மனிதப்புலியான இராமன் மீது கௌடில்யமாகிற விஷத்தைக் கக்கி, தோலுரித்த பெண்சர்ப்பம்போல் சஞ்சரிக்கப் போகின்றாள். இராமனைக் காட்டுக்கு ஓட்டிவிட்டுத் தனது மனோரதங்களை யடைந்து சிந்தையற்ற மனத்தோடு நிற்பவளான அழகியகைகேசி, வீட்டினுட்சஞ்சரிக்குங் காலசர்ப்பம்போல மீண்டும்என்னைப்பயப்படுத்தப்போகின்றாள்...அரசரே, ஆகிதாக்கினியான ஒருவன்பருவகாலத்தில்தேவதைகளுக்குஅளிக்கவேண்டிய அவிர்ப்பாகத்தை ராக்ஷஸர்களுக்குத் தந்ததுபோல், இராமனை அவனுக்குக் கொடுக்கவேண்டிய இராச்சியத்தினின்று சுவேச்சையால் நீக்கிக் கைகேயிக்குக் கொடுத்தீர். விற்பிடித்து நிற்கும் என் வீரப்புதல்வன்தனது மனைவியுடனும் லக்ஷ்மணனுடனும் இப்பொழுது வனத்திற் புகுகின்றானென்பது நிச்சயம். அவர்கள் அரணியத்தில் வசிப்பதன் கஷ்டத்தை இதுவரையிற் சற்றும் அறியார்களே. கைகேசியின் இஷ்டப்படி நடக்குந் தங்களால் ஓட்டிவிடப்பட்ட அம்மூவரும் காட்டில் என்ன பாடு படுவார்களோ.........பிள்ளைமேல் ஆசையை உடைய நான், இளைய கன்றையுடைய பசு சிங்கத்தால் தன் கன்றை இழந்ததாவதுபோல், கைகேயியால் மகனை இழந்தவளானேன்......"

வெந்தபுண்ணில் வேல் எறிவதுபோன்ற இச்சொற்களால் இடித்துரைக்க முதனூற் கோசலையொருத்தி எக்காலத்திற்கும்சாலும் என்றுஎண்ணிய கம்பர், அவளைத் திருத்தியமைத்துள மற்றைய மென்மை நயங்களுக்கிணங்க, இங்கு, "தனிநாயக, கலையின் கடலே, மறையின் நிலையே, பெரியோய், வருத்தம் வந்துற்ற காலையில் முற்றிலும் அழிந்து இவ்வண்ணம் மாய்வது நினக்குத் தகுமோ, அழகோ, என்னைக்கண் டிரங்கியாயினும் சிறிது தேற்றிக்கொள்ளாயோ" எனச் சாற்றுவாளாயினள்.

ஆம், ஒன்று நினைத்து ஐயுறலாம். கம்பரது நூலின்படி, கைகேசியின் செயலிதென்று கோசலைக்கு இது காறுந் தெரியாதாதலின், அது தெரிந்தபின் வான்மீக நூலிற் கூறிய அவள் வாக்கியத்தோடு இதனை ஒப்பிடுதல் நேர்மையன்றென எண்ணுதல் இயலும். இந்தச் சங்கை தீர்வதற்கு வெகுநேரங் காக்கவேண்டா. மடந்தையிவள் புலம்பிய ஒலிகேட்டு வசிட்டமுனிவன் விளைந்த தறிய அவ்வயின் விரைந்தடைந்து கைகேசியை வினவுதலும் அந்த மாதராள், "தன்னால் நிகழ்ந்த தன்மை தானே தெரியச்சொன்னாள்." சொன்னபின் வசிட்டன், அவ்வரங்களைத் தவிர்கவென்று கைகேசியை வேண்டிக்கொண்டதையும் தயரதன் வேண்டிக்கொண்டதையும், அவ்விரு வேண்டுகோள்களையும் வலிய மொழிகளால் கைகேசிமறுத்ததையும் கேட்டுக்கொண்டிருந்தனள் கோசலை. கேட்ட பிறகும்,

மாற்றாள் செயலா மென்றும்
கணவன் வரமீந் துள்ளம்
ஆற்றா தயர்ந்தா னென்றும்
அறிந்தா ளவளும் மனத்தைத்
தேற்றா நின்றாண் மகனைத்
திரிவா னென்னா ளரசன்
தோற்றான் மெய்யென் றுலகஞ்
சொல்லும் பழிக்குஞ் சோர்வாள்

[தன் சக்களத்தியின் செய்கையாம் இதுஎன்றும், அரசன் வரத்தைக் கொடுத்துவிட்டு உள்ளம் தாங்காமல் தளர்ந்தான் என்றும் அறிந்தாள். தன் மனத்தைத் தேற்றிக்கொண்டாள். தன் மகன் காட்டிற்குப் போகாமல் திரும்பவேண்டும் என்று சொன்னாள் அல்லள். அதனால் தனக்கு உண்டாகுந் துன்பத்தோடு, அரசன் மெய்க்குத் தோற்றுவிட்டனன் என்று உலகம் பழிக்குமே என நினைத்தும் சோர்வடைந்தாள்]

எனவே கம்பர் எடுத்துக்காட்டி வற்புறுத்துகின்றார். இதன் பின் அவள்,

தள்ளா நிலைசான் மெய்ம்மை
தழுவா வழுவா வகைநின்
றெள்ளா நிலைகூர் பெருமைக்
கிழிவா மென்றா லுரவோய்
விள்ளா நிலைசே ரன்பான்
மகன்மேன் மெலியின் னுலகங்
கொள்ளா தன்றோ வென்றாள்
கணவன் குறையக் குறைவாள்.

[வலிமையுடையவனே, தள்ளத்தகாத நிலைமையால் பெருமைவாய்ந்த சத்தியத்தைத் தழுவி அதனின்றும் வழுவாத நிலைநின்று பிறகு, இகழலாகா நின் உயர்விற்கு இழிவாகும் என்பது தேர்ந்தும், உரைப்பதற்கரிய அன்பால் மகனைப்பற்றி நீ உன்நிலை சோர்ந்தால், உலகம் அதனை ஏற்றுக்கொள்ளாதன்றோ, என்றாள்—கணவன் குறையைத் தன்குறைவாகக் கொண்டழியும் அப்பெருந்தகையாட்டி]

இதுவன்றோ இல்லாட்குரிய இயற்கை. இதனாலன்றோ அவள் ஆற்றல்சால் கோசலை யாயது. மன்னனிற் பன்மடங்கு மேன்மை இவள்பால் காண்கின்றோம். மகளிர் இருக்கின்ற பரிசு இதுவென வான்மீகி முனிவர் உண்மையைக் காட்டினார்; அன்னார் இருக்க வேண்டிய மேன்மை எதுவெனக் கம்பர் காட்டுகின்றார். "உயர் கோசலையாம் அன்னம்" என்ன அவளைப் புகழ்ந்து உருகுகின்றார், அவளைத் திருத்தியாக்கிய செந்தமிழ்க் கவிவாணரே. அவள் தன்னிலை நினைந்து தளர்ந்தாளல்லள்; கைகேசியை இங்கிதத்தாலும் பழித்தாளல்லள். கொழுநன்பால் குறைதான் கண்டாளல்லள். அவன் குறையா திருக்கவேண்டுமே என்றொரு கருத்தே யுடையவளாயினள். வருத்தம் பெரிதுடையாள் உண்மையே; ஆனால், அதனால் அவள் திருத்திய நேர்மையினின்று தீர்ந்திலள்:

உலகத்தோர் உய்வதற்கு வான்மீகியையும் கம்பரையும் அயலயல் வைத்துப் பயில்வதனினும் சிறந்ததோர் செவ்வி சேர்த லரிது.




— லோத்ரா —

ஸ்திரீகளுக்கு
மகிழ்ச்சியையும்
ஆரோக்கியத்தையும் தரும்.

— அம்ருதா —

இரத்தத்தைச் சுத்தி செய்யும்.

— அர்கா —

ஜுரத்தைப் போக்கும்

எல்லா மருந்துக்கடைகளிலும் கிடைக்கும்.

கேசரி குடீரம்

இந்திய கெமிஸ்ட் & டிரக்கிஸ்டு.

எழும்பூர். :: :: சென்னை.

சுகவாழ்வு

நாம் நமது நாட்டில் சுகமாக வாழவிரும்பினால் வியாதிகள் என்னும் சத்துருக்களுக்கு இடங்கொடாமல் நமது தேகத்தைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். நீங்கள் தேக அசதி, மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகமின்மை, மூத்திர சம்பந்தமான வியாதிகளால் கஷ்டப்பட்டால் உடனே,

ஆதங்க நிக்ரஹ
மாத்திரைகள்

உபயோகியுங்கள். தேகத்தை வஜ்ர சரீரமாக்கி வைரக்கற் கோட்டையைப் போல் பாதுகாக்கும் 32 மாத்திரைக ளடங்கிய டப்பி 1க்கு ரூபா 1

இனாம்! இனாம்!!

போஜன விதி

உடனே விலாசத்தைத் தெரிவியுங்கள்.

ஆதங்க நிக்ரஹ
ஔஷதாலயம்,
26, பிராட்வே,
மதராஸ்.

ஏற்படுத்தியது] நாஷனல் [1906.

இன்ஷுயரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷுயரன்ஸ் பில்டிங்ஸ், 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

அபூர்வ வளர்ச்சி

ஏனென்றல்,

லைப் இன்ஷுயரன்ஸிற்குரிய சிறந்த அம்சங்கள் எல்லாம் இதனில் உண்டு:—

குறைந்த பிரீமிய விகிதம்
மிகுந்த போனஸ்
தாராளமான பாலிஸி நிபந்தனைகள்
பாலிஸி ஹோல்டர்களுக்கு வேண்டிய சவுகரியங்கள் செய்தல்.
கிளேய்ம் தொகைகளைத் தாமதமின்றித் தீர்த்து விடுதல்.

சீர்தூக்கிப் பார்க்குங்கால்

இந்தக் கம்பனிக்குச் சமமாக வேறெந்த இந்திய லைப் இன்ஷுயரன்ஸ் கம்பனியும் வந்ததில்லை.

ஏஜெண்டுகள் வேண்டும். விவரங்களுக்கு எழுதவும்.

113, அரமனைக்காரன் தெரு, சென்னை. T. அனந்தாசாரி, B. A. பிரான்ச் செக்ரடரி.

- பாரதி -

சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

மூன்றாவது ஆண்டு

நடக்கின்றது.

| | |
|---|---|
| உள் நாடு வருட சந்தா | ரூ. 2 0 0 |
| வெளி நாடு ,, | ரூ. 2 8 0 |

தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணா 5 வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசீய மணம்கமழும் பத்திரிகை.

ஆசிரியர்:—R. நாராயணசாமி.

விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ், உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

கலா நிலயம் 1930-வது வருடக் கலாநிலயக் கட்டுரைகள்

அறியாமை வேண்டப்படும் - கட்டுரை 4 சுயநலச்சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம், மூயலுக்கு மூயல வேண்டா, நல்லோர்கடன், எத்தைக்கண்டு இச்சைகொள்வோம், அலையடங்கத் தூக்கவேண்டா, தர்க்கத் தளர்ச்சி, கல்லாதபேர்களே நல்லவர்கள் 4.வண்டிமாடும் மாட்டுவண்டியும் 3. சகுனியின் மாபுதான் சாய்வதில்லையோ, உரிமையாற்பெரியாகார், நாணத்தால் வைவார்திறம், மால்வாலியோவின்மாபு மாய்ந்ததில்லையோ, மானமழிந்தபின், மண்காற்று, பேயச்சில் பிள்ளையாரோ, தலைமேழ்கணக்கு, பள்ளியிற் பழுத்தபழம், கள்வரும் காவலும், பொன்னெழுத்தாற் பொறிக்கலாமோ, அரக்காற்றல், சண்டெலி ஆற்றல், வாலின்நீளம், பெருமையின்பெருமை 2. இவை தலையங்கங்கள் இவைதவிரக் கம்பராமாயணம் - அயோத்தியாகாண்டம், குறுந்தொகை - உரையுடன் நம்மாழ்வார் வைபவம், மானதசாத்திரம் தமிழ்ப்பாடம் (புணரியல்முழுதும்) மொழிபெயர்ப்புக்கட்டுரைகள், மலர்வனம், பழமுதிர்சோலைமாதவி மாதவம் ஆய பல சிறந்த கட்டுரைகள். வேண்டுவோர் சீக்கிரம் எழுதவும். தபால் செலவு உள்பட

தோல்பயிண்டு உள்நாடு 10-0-0 வெளிநாடு 11-8-0.

கலாநிலயம், வேளாளர் தெரு, புரசைவாக்கம், சென்னை.

# ANCIENT JAFFNA

BY

**Mudaliar C. RASANAYAGAM C.C.S.**

FOREWORD

BY

**Professor S. KRISHNASWAMI AIYANGAR, M.A.**

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidently in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the Cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

**Price Rs. 5-8-0 (V.P. Charges extra)**

**"KALANILAYAM"**
*VELLALA STREET,*
*Purasawalkam, MADRAS.*



| நோயற்ற : : : : வாழ்வே | ஆரோக்கிய வாழ்க்கைக்கேற்ற இரு அருமருந்துகள் | குறைவற்ற : : செல்வம் |
|---|---|---|

**"ஸித்தகல்ப மகரத்துஜம்"**

(ரிஜிஸ்டர்ட்)

தேகத்திலுள்ள கொடியவியாதிகளை நீக்கி இரத்தசுத்தி செய்து, நரம்புகளைப் பலப்படுத்தி மூளைக்கு ஞாபக சக்தியையும் தேகத்திற்குப் பலத்தையும் அளிப்பதில் இம் மருந்து ஒப்புயர்வற்றது. இவ்வரிய ஔஷதத்தின் பெருமையைப் போற்றாத வைத்தியர்களே யில்லை. தேக ஆரோக்கியத்தைப் பெருக்கி வாழ்நாட்களை வளரச்செய்யும் சக்தி இம்மருந்தில் நன்கு அமைந்திருக்கிறது. ஒரு புட்டி மருந்தே தேகத்தை வலுப்படுத்தவும், ஜீவசக்தி, ஞாபக சக்தி பெறவும் போதுமானது. மூளையைக் கொண்டு பிழைப்பவர்களுக்கு இது ஓர் வரப்பிரஸாதம்.

60 மாத்திரைகள் கொண்ட புட்டி ரூபா **10**

**"மஹா சந்தனாதித் தைலம்"**

ஒப்புயர்வற்ற இத்தைலம் மூளைக்குப் பலத்தை அளித்து ஞாபக சக்தியை வளர்ப்பதிலும் நரையை நீக்கி, கூந்தலைக் கருமையாகவும் மழமழப்பாகவும் வளர்ச்சி செய்து அறிவையும் ஆற்றலையும் வளர்ப்பதில் பெயர்பெற்றது. கபால உஷ்ணம், மறதி மனச்சோர்வு, மயக்கம் மந்தப் பார்வை, தலைவலிபோன்ற நோய்களைப் போக்கி ஆனந்தத்தை அளிக்க வல்லது. மூளையைக் குளிர்ச்சி செய்து மனோரம்மியத்தை வளர்க்கும் இத்தைலம் ஆயிரக் கணக்கானவர்களால் போற்றப்பட்டது. ஒரு முறை உபயோகித்துப் பார்த்தால் இதன் அபாரசக்தியும் பெருமையும் நன்கு விளங்கும்.

1 மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய 12 அவுன்ஸ் புட்டி விலை ரூபா **5**.

உங்கள் நரம்புகளையும், தேகத்தையும் பலப்படுத்தவும், ஞாபக சக்தியைப் பெறவும், நோய்களிலிருந்துவிடுதலையடைந்து ஆரோக்கிய சுயராஜ்யத்தைப் பெறவும் சுலபமான வழி,

ஆயுர்வேத ரத்ன பண்டிட் டாக்டர் N. V. ஸ்ரீ ராமாசார்லு அவர்களின்

இணையற்ற ஔஷதங்களிலேயே இருக்கின்றது. அவைகளை உபயோகித்து இன்ப வாழ்வு நடத்தச் சிறிதும் தயங்காதீர்கள்.

**மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட் சென்னை.**

தபால் பெட்டி 151, சென்னை. கேட்லாக் இனாம். தந்தி விலாசம் 'கல்பம்' சென்னை.

மானேஜர்.—வி. ரகுபதி, B.A.,B.L. ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.



இனாம்! இனாம்!!

**வைத்திய வித்தியா**

யௌவனம் என்னும்பொக்கிஷத்தையும்ஆரோக்கியமென்னும் குன்றாத செல்வத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இப் புத்தகத்தை வாசித்துச் சுகமடையலாம்.

மதனமஞ்சரி பார்மஸி,
1/94, சைனா பஜார், மதராஸ்.



வித்வான் த. சண்முகக் கவிராயரின்

**:: மகா பாரதம் தமிழ் வசனம் ::**

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை, வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.




## வர்த்தமானம்

ஸ்ரீசிங்கேரிமட புதிய சங்கராசாரியார்:—ஸ்ரீசிங்கேரி மடத்திற்குப் புதிய சங்கராசாரியார் நியமன விஷயமாய் மடத்தார், பெங்களூர் வாசியான ஸ்ரீமான் ராமசாஸ்திரியின் குமாரர் பிரமசாரி ஸ்ரீ சீநிவாஸ சாஸ்திரியார் தெரிந்தெடுக்கப்பட்டார். அவர்களுக்கு 21-ந் தேதியன்று ஸ்ரீசிங்கேரியிலுள்ள துரங்தரா நதிக்கரையில் அபிஷேகம் நடைபெற்றது. இப்புதிய ஸ்வாமிகளின் வயது 14. ஸ்வாமிகள் ஸ்ரீஜெகத்குரு சந்திரசேகர பாரதியாரிடம் உபதேசம் பெற்று, சிகை பூணூல்களை விலக்கி, காஷாயம் பெற்றுப் பட்டம் ஏறினார்.

***

பாரி திருநாள்:—வீரஞ்செறிந்த தமிழ்நாட்டு வீரனும் கொழுகொம்பின்றித் துவண்டு துவண்டு வருந்திய கொல்லையின் முல்லைக்கு எல்லையில் நல்லருள் கொண்டு தேரை ஈந்தவனும், கடையெழு வள்ளல்களில் முதன்மை பெற்றவனும், தமிழ்ப் பெரு மூவேந்தர்களின் கீர்த்தியைத் தனது கொடைத்திறத்தால் மழுங்குவித்தவனும் அம்மூவருடன் போராடி உயிர் நீத்தவனும், அடியார்க்கடியாராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளால் தேவாரத்திலும், திருவண்ணாமலை வாப்பிரசாதியாகிய அருணகிரி நாதரால் திருப்புகழிலும், முற்காலப் புலவர்களாகிய ஔவைப் பிராட்டியாராலும், போற்றிப் புகழப்பட்ட பறம்புமலை (பிரான்மலைக்) கோமானாகிய பாரி வள்ளல் திருநாள் நாளது வைகாசி மாதம் 18-மே 31-ந்தேதி ஞாயிற்றுக் கிழமையன்று வருகிறது.

***

ஜவுளி பகிஷ்காரம் :—இந்தியா கவர்ன்மெண்டின் உள்நாட்டிலாகாக் காரியதரிசியான மிஸ்டர் எமர்ஸனுடன் சமீபத்தில் செய்த சம்பாஷணையின் பயனாகக் காந்திஜீ "யௌவன இந்தியா' பத்திரிகையில் மறியலைப்பற்றி, ஒரு வியாச மெழுதியிருக்கிறார். அதில் அவர் மறியல் எப்பொழுதும் அமைதியாக நடைபெறுவதாக இல்லை என்று மாகாண கவர்ன்மெண்டுகளிடமிருந்து இந்தியா கவர்ன்மெண்டிற்குப் புகார் வருவதாகக் காங்கிரஸ்காரர்களுக்கு ஞாபகமூட்டிவிட்டு எழுதுவதாவது :—இந்தப் புகார்கள் எவ்வளவுதூரம் நியாயமானவை என்பது எனக்குத் தெரியாது. ஆனால் உடன்பாட்டை நிறைவேற்றி வைப்பதில் அதிகாரிகள் தங்கள் பகுதியை எப்படிச் செய்தபோதிலும் நாம் நமது பகுதிக்குரிய நிபந்தனைகளை நிறைவேற்றி வைப்பதில் அதிக கண்டிப்பாக இல்லாமல் இருக்கமுடியாது. நாம் நமக்குரிய நிபந்தனைகளை அனுசரிப்பதில் எவ்வளவுக்கெவ்வளவு கண்டிப்பாக இருக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நமக்குப் பலமும்கௌரவமும் அதிகரிக்குமென்பதை மனதில் கொள்ளவேண்டும். நேராகவோ அன்றி மறைமுகமாகவோ நிர்ப்பந்த மெதுவு மிருக்கக் கூடாது. ஜாடையாகக்கூடப் பயமுறுத்தக் கூடாது. இதனால் 5 மறியல்காரர்களுக்குமேல் ஓரே இடத்தில் ஓரேகாலத்தில் மறியல் வேலை செய்யக்கூடாது. மரியாதையாகவும் வினயமாகவும் வேண்டிக்கொள்ளவும் துண்டுப் பிரசுரங்களை வழங்கவும் வேண்டும். இதற்கு அதிகப்படியாக எதுவும் செய்யக்கூடாது. வாக்கு மீறி நடப்பதற்காக அந்நியத் துணி வியாபாரிக்கு அபராதம் விதிக்கக்கூடாது. அந்நியத்துணியை வாங்குகின்றவரைக் கூச்சலிட்டுக் கேலி செய்யக் கூடாது. அவர்களைச் சூழ்ந்து வியூகம் வகுத்து நிற்பதுபோல நிற்கவும் கூடாது. ரஸ்தாக்களில் படுத்துக்கொண்டு வழிகளைத் தடைப்படுத்தவும் கூடாது. இம்மாதிரியான நிர்ப்பந்தங்களுக் குட்பட்டு மறியல் செய்வதில் பலனில்லை என்று நினைக்கிரவர்களிருந்தால் அவர்கள் மறியலை விட்டுவிடலாம். தங்களுடைய கண்ணுக்கெதிரில் அந்நியத்துணி விற்கப் படும்படி அவர்கள் விட்டுவிடுவது உசிதம்.

அந்நியத் துணி விற்பனையைத் தடுப்பதற்காக நாம் உடன்பாட்டின் வாசகத்தை அல்லது கருத்தை மீறுவதைவிட அந்நியத்துணி விற்பனை நடைபெறும்படி விட்டுவிடுவது உசிதமானது. காங்கிரஸ் செய்தியானது பாமர ஜனங்களுள் பரவி கதர் தத்துவ ஞானம் அவர்களுள் எல்லாம் ஏற்படும்பொழுது தான் அந்நியத்துணி பகிஷ்காரம் வெற்றிபெறும். உண்மையான பிரசாரவேலையும் உற்பத்திவேலையும் நடைபெற வேண்டியது கிராமங்களில்தான். அந்நியத் துணி பகிஷ்காரமானது அதன் பொருளாதார, சமூகப் பலன்களுக்காகக் கையாளப் படுவதால் ஜப்பானிய இத்தாலிய ஜவுளிகளையும் நூலையும் பிரிட்டிஷ் ஜவுளி நூல் இவற்றைப்போல் பகிஷ்கரிக்க வேண்டிய தவசியம். ஜப்பானியத் துணி கதருடனும் இந்திய ஆலைத்துணிகளுடனும் அதிகம் போட்டி போடுவதால் அதனைப் பகிஷ்கரிக்க வேண்டியது அதிக அவசியமாகிறது. இவ்வாறு செய்கையில் ஜப்பானிடம் நமக்குத் துவேஷ மெதுவுமில்லை. தேசத்தின் பொருளாதார அவசியத்தை முன்னிட்டு நாம் அந்நியத் துணியைப் பகிஷ்கரிக்கின்றோம். மேற்கண்ட முறையில்தான் கள்ளு சாராயக் கடைகளையும் மறியல் செய்யவேண்டும் குடிகாரர் வீடுகளுக்குள் மதுவிலக்குச் செய்தி பரவினால்தான் கள்ளு சாராயக் கடை மறியலும் இறுதியில் வெற்றி பெறும்.


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,

**நஞ்சன்கூடு பல்பொடி** நஞ்சன்கூடு.

... லிமிடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்.

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

SADVAIDYASALA NANJANGUD
THE UNITED CONCERN, MADRAS

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவாம்ருதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (2-0-0) பிரான்கு;

டிப்போ, பம்பாய் கல்கத்தா

NANJANGUD TOOTH POWDER


188918

KALANILAYAM.
REG. NO. M, 2324.

:: பிரபல ஜோதிஷர் :: மஹாராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும் தங்கமெடல்களும் நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றவர்.
ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. ஒரு வருஷ பலன் எழு ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம்தேவை) (ஜ்யோதிட ஞானபோதினி விலை அணா 8. பண்டித காழியூர்,
ம. ஸ்ரீனிவாஸாசாரியார்,
218 தங்கசாலை வீதி, மதராஸ்.

## கலா நிலய முன்னைய இதழ்கள்

மூன்றாண்டு இதழ்களும் பயிண்டுசெய்தும் செய்யாமலும் கிடைக்கும்

முதல் ஆண்டு:—ராமாயணம்—பால காண்டம், அகப்பொருள் வரலாறு, காந்தார நாட்டுக் கட்டழகி எனும் சிறந்த நாவல், மலர் வனம், பழமுதிர்சோலை, தமிழ்ப் பாடம், கண்ணப்ப நாயனார் சரித்திர ஆராய்ச்சி, முதலிய பல அரிய கட்டுரைகள்.

இரண்டாமாண்டு:—அப்பர் தேவார ஆராய்ச்சி, நாவல், ஆங்கிலக் கட்டுரை மொழிபெயர்ப்பு, கம்பராமாயணம்—பால காண்டம், அகப்பொருள், தமிழ்ப் பாடம் ஆய பல அரிய கட்டுரைகள்.

மூன்றாமாண்டு:—கம்பராமாயணம்—அயோத்தியா காண்டம், மானத சாத்திரம், குறுந்தொகை (உரையுடன்) ஸமஸ்கிருத நாடக மொழிபெயர்ப்பு. அனைய பல கட்டுரைகள்.

தோல் பயிண்டு—விலை உள்நாடு ரூ. **10—0—0**, வெளிநாடு ரூ. **11—8—0**.
(தபால் சார்ஜ் உள்பட.)

விலாசம்:—

**கலா நிலயம், புரசைபாக்கம், சென்னை.**

இரண்டு ஸம்ஸ்க்ருத

**மஹாகாவியங்களின்**

தமிழ் மொழி பெயர்ப்பு.

ஆயுர்வேத பூஷண பண்டித

எம். துரைசாமி ஐயங்கார் அவர்களால்

மொழி பெயர்க்கப் பட்டவை.

காதம்பரீ

சீர்திருத்திய பதிப்பு

1400 வருஷங்களுக்கு முன் ஸ்ரீ பட்டபாணன் இயற்றிய ஸம்ஸ்கிருத காதம்பரீயின் மொழி பெயர்ப்பு. கதை வெகு அற்புதமானது. பண்டைக்காலத்திய இந்திய நாகரீகத்தை விளக்கும் வர்ணனைகள். வாக்கிய நடை தமிழில் இனிதாகவும் எளிதாகவும் அமையப்பெற்றது. "காதம் பரீயைப் படிக்கையில் இரஸிகர் உணவும் விரும்பார்" என்பது வித்வான்களின் பழமொழி. அநேக படித்த வித்வான்களும் ஸ்த்ரீகளும் இக்காதம்பரீயைப் புகழ்ந்து வருகிறார்கள். விலை ரூ. 1—8—0

மேக ஸந்தேசம்.

ஸ்ரீ காளிதாஸ மஹாகவி இயற்றிய ஸம்ஸ்கிருத காவ்யத்தின் அழகிய தமிழ் மொழி பெயர்ப்பு. ஒவ்வொரு பத்தியமும் ஒரு பதம் விடாமல் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. சாப வசத்தால் மனைவியை விட்டுப் பிரிந்த ஒரு யக்ஷன் தன் மனைவிக்குத் தூது அனுப்பும் விஷயம் வெகு மனோஹரமாய் அமைந்துள்ளது. தமிழ் நடை வெகு இனிது. ஒவ்வொரு பக்கத்தில் அரும்பத உரையும் உபகதைகள் முதலியதைப் பற்றிய அநுபந்தம், முகவுரை முதலியன வெகு உபயோகமாயிருக்கும்.

தற்கால விலை ரூ. 0—14—0

இரண்டு நூல்களும் ஒரே தடவையில் விலை ரூ 2.

தபால் சார்ஜு முதலியது வேறு.

வைத்திய கலா நிதி ஆபீஸ்.

85. வெள்ளாழத்தெரு, வேப்பேரி, மதராஸ்

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

1. குலசேகர ஆழ்வார் அருளிய பெருமாள் திருமொழி:—மூலமும், பு. பா. இரத்தினசபாபதி நாய்க்கர் எழுதிய பதவுரை, விசேடவுரை, சரித்திரக் குறிப்பு, இலக்கணக் குறிப்புடன் கூடியது. விலை மார்பில் ரூ. 1-0-0. கலிகோ ரூ. 1-4-0.

2. அகத்திய முனிவர் அருளிய ஆறெழுத்து அந்தாதி:—முருகக் கடவுளை உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளார் என்று கருதலாகும் நூறு செய்யுள் கொண்டது. டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையின் உரையுடன் விலை அணா 12.

3. கம்பராமாயணம்-பாலகாண்டம்:—T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு. கவியின் சொற்கொண்டே பாட்டின் பொருளைத் தெரியும் வண்ணம் உரைவரையப்பட்டுளது. அரும்பதவுரையும் விசேஷக் குறிப்புகளும், சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 2-8-0.

4. ஏமாங்கதத் திளவரசன்:—ஸ்ரீமான் T. N. சேஷாசலம் ஐயர் B.A.B.L. எழுதியது. இலக்கிய நயம் துலங்குமோர் காதர் கதை. விலை ரூ. 1.0-0.

5. முருகன்—ஓர் உழவன்:—ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A. B.L. ஆங்கிலத்தில் வரைந்த நாவல் நூல். ஸ்ரீமதி கிருஷ்ண குமாரி தமிழில் மொழி பெயர்த்துள்ளார். விலை ரூ. 1-8-0.

6. திருக்குறள்:—மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு. திருக்குறளை ஆராய விரும்புவோருக்கு மிகவும் உபயோகமானது. விலை அணா 12.

கலாநிலயம் ஆபீஸ்; புரசைவாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)